வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 29.11.2021 திங்கட்கிழமை | இதழ் : 359 | பக்கங்கள் : 16




# தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்க



## சித்தார்த்தன் தலைமையேற்க முன்வரவேண்டும்!



## கட்சி பிரதிநிதிகள் மத்தியில் மாவை பகிரங்க அழைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 29

"தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும்", என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.

15



## பாணின் விலை ரூ. 10ஆல் உயர்வு

கொழும்பு, நவ. 29

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாணின் விலை 10

15



## கொத்து ரொட்டியின் விலையும் எகிறியது!

கொழும்பு, நவ. 29

கொத்து ரொட்டி மற்றும் ரோல்ஸ் போன்ற சிற்றுண்டிகளின் விலையும்

15

## ஒற்றுமைப்பட சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

### சித்தார்த்தன் எம். பி.

யாழ்ப்பாணம், நவ. 29

"அரசியல் தலைமைகளின் ஒற்றுமைக்கு தொடர்ச்சியாக முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட ரீதியாகவும் மற்றவர்களுடன் பேசியும் பல முயற்சிகளை எடுத்து வருகிறோம். இது தனி ஒரு

15

## கொரோனா தொற்றால் மேலும் 27 பேர் மரணம்!

கொழும்பு, நவ. 29

நாட்டில் மேலும் 27 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

14 ஆண்களினதும், 13 பெண்களினதும் மரணங்கள் இவ்வாறு பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்று

15

## சுன்னாகத்தில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

### ஒரேநாளில் இரு சம்பவங்கள்



யாழ்ப்பாணம், நவ. 29

சுன்னாகம் - கந்தரோடையில் எரிவாயு சிலிண்டருடன் பொருத்தப்பட்டிருந்த அடுப்பு வெடித்து சிதறியது. அந்த சமயம் சமையலறையில் எவரும் இருக்காததால் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

15

## உண்மையான அக்கறையிருந்தால் நாட்டை இராணுவத்திடம் வழங்குக

### ஜனாதிபதியை கேட்கிறார் தெற்கின் பிரபல தேரர்

கொழும்பு, நவ. 29

"நாட்டில் மக்கள் வைத்திருந்த எதிர்பார்ப்பெல்லாம் தவிடுபொடியாகி உள்ளது. எனவே, நாட்டை 10 வருடங்கள் இராணுவத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தென் மாகாணத்தின் பிரசித்தி பெற்ற தேரர்களில் ஒருவரான கெட்டமான்னே தம் மாலங்கார தேரர் கூறியுள்ளார்.

மாத்தறையில்

15

## இலங்கையை அமெரிக்க ஜனாதிபதி புறக்கணித்தது ஆச்சரியமானதல்ல

### ஐ.தே.க. அறிக்கை

கொழும்பு, நவ. 29

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஜனநாயக மாநாட்டிற்கு இலங்கையை அழைக்காதது குறித்து ஆச்சரியமடையவில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்கு

15

## அச்சுறுத்தி மதம் மாற்ற முயற்சி மாங்குளத்தில் மூவர் கைதாகினர்!

மாங்குளம், நவ. 29

சைவ சமயத்தவர் ஒருவரை அச்சுறுத்தி மதம் மாறுமாறு கூறியவர்களில் மூவரை மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மாங்குளம் பனிச்சங்குள பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் ஹைஏஸ் வாகனம் ஒன்றில் ஒருவரின் வீட்டுக்கு சென்ற ஒரு மதப் பிரிவினர், அந்த வீட்டின் உரிமையாளருடன் "ஆண்டவர் உங்களை காப்பாற்றுவார்", என்று கூறி தங்கள் மதம் தொடர்பில் கூறுவதற்கு அனுமதிக்குமாறு கேட்டுள்ளனர்.

15

## நெடுந்தீவிலும் சடலம் ஒதுங்கியது

யாழ்ப்பாணம், நவ. 29

நெடுந்தீவு கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை, அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை அடையாளம் காணும் முயற்சியிலும் மேலதிக நடவடிக்கைகளிலும், நெடுந்தீவு

15

## வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்!

### சிவகுரு ஆதின முதல்வர் வேலன் சுவாமிகள்

முல்லைத்தீவு, நவ. 29

"வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டு இராணுவத்தின் அராஜக செயல்பாடுகள் தலைதூக்கியுள்ளன. எனவே தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இராணுவம்

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## தமிழ் கட்சிகளை...

ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் பொது செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம், தமிழர் சமூக ஜனநாயக கட்சி செயலாளர் ஸ்ரீதரன் (சுகு), இலங்கை தமிழ் அரசு கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் எனப் பல அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்திய கூட்டத்திலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) பொது செயலாளர் சு. சதானந்தன் (ஆனந்தி அண்ணர்) நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தவை வருமாறு,

"தமிழ் மக்கள் இன்று மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றில் என்றுமில்லாதவாறு நெருக்கடிமிக்க காலமாக இன்றைய நிலைமை இருக்கின்றது. இங்கு பேசிய எல்லோருடைய பேச்சுக்களும் நாங்கள் இன்னும் சரியான இடத்திற்கு வந்திருக்கவில்லை என்பதையும், தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பாக சரியான கோட்டில் பயணிக்கவில்லை என்பதையும் மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டின.

இதற்கு நானும் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இந்த இனத்துக்காக மிக நீண்டகாலமாக உழைத்தவன் என்ற ரீதியிலும் மிகப்பெரிய பாரம்பரியமுடைய கட்சி ஒன்றின் தலைவர் என்ற ரீதியிலும் நானும் அதற்கான பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கிறேன். இந்த அடிப்படையில்தான் இன்றைக்கு எந்த பக்கம் திரும்பினாலும் ஒன்றுபட்ட தரப்பாக ஒற்றுமைப்பட்ட தரப்பாக நாங்கள் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்ற விடயம் இன்று நேற்றல்ல மிக நீண்ட காலமாகவே பேசப்படுகின்றது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்த விடயம் இன்னும் கைகூடவில்லை.

ஆனால், இதற்காக நாங்கள் அதை கைவிட்டுவிட முடியாது. இதை கைகூட வைக்கின்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டேயாக வேண்டிய கட்டாயம் இருப்பதாகவே கருதுகிறோம். அன்றைய நாட்களில், அதிலும் குறிப்பாக தமிழ் அரசுக் கட்சியின் - தமிழினத்தின் தந்தை செல்வாவின் தளபதியாக, தலைவர் அமிர்தலிங்கத்தின் தளபதியாக இங்கே இருக்கின்ற சித்தார்த்தனின் தந்தையார் தருமலிங்கம் அந்த நாட்களில் செயல்பட்டதை எண்ணிப் பார்க்கின்றேன்.

கட்சியிலோ அல்லது கட்சிக்கு உள்ளேயோ ஒரு பிரச்னை வருகிறது என்றாலும் சரி, கட்சிக்கு வெளியிலே ஒரு பிரச்னை ஏற்படுகிறது என்றாலும் சரி, முதலில் சமாதானம் பேசுகிற ஒரு தூதராக இருந்தவர் தருமலிங்கம்தான். அன்றைக்கு பெரிய தலைவர்களோடு விவாதிக்கும் விடயங்களை அவர்களோடு விவாதித்து விட்டு அதை இளைஞர்களான எங்களோடு அன்றைய நாட்களிலேயே பகிர்ந்து கொண்டிருக்கிறார். அவரிடம் நாங்கள் கேள்விகளை எழுப்பும்போது மிகவும் கவனமாக - அதை உண்மையாக எங்களுக்கு அவர் விளக்கமளித்து இருப்பதை நான் இன்றைக்கும் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியான காலசூழ்நிலையில் அவரின் வழித்தோன்றலான சித்தார்த்தன், தமிழ்த் தேசிய இனத்தின் நன்மை கருதி சிதறிப் போயிருக்கக்கூடிய தமிழர் தரப்புகளை ஒன்றிணைக்க தலைமை தாங்க வேண்டும். சகல தமிழ் தரப்புக்களையும் ஒன்றிணைக்கக்கூடிய ஆற்றல் அவரிடம் இருப்பதாக நான் கருதுகிறேன். ஏனென்றால், எந்த ஒரு விடயத்தையும் நிதானமாகவும் பொறுப்பாகவும் செயல்படுத்தி எல்லோரோடும் நட்போடு பழகக்கூடிய தன்மையும் இருக்கக்கூடிய சித்தார்த்தன் ஒற்றுமை முயற்சியை தலைமை தாங்கி கொண்டுசெல்ல வேண்டும் என்று நான் அவரிடம் மிகவும் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றேன். இதை அவர் நிறைவேற்ற வேண்டும். அதுதான், அவர் தமிழினத்திற்கு செய்யக்கூடிய ஒரு மாபெரும் கடமையாக இருக்கும் - என்றார். (ஐ - 3)

## ஒற்றுமைப்பட...

மனிதன் செய்யக்கூடிய விடயமல்ல. மாவை சேனாதிராசா, சுரேஷ் பிறேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்ற அனைவரும் இணைந்து இந்த முயற்சியை எடுக்க வேண்டும்", என்று புளொட்டின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் சு. சதானந்தன் நினைவஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமை முயற்சிக்கு த. சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பில் அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாம் தொடர்ச்சியாக அரசியல் தலைமைகளின் ஒற்றுமைக்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். தனிப்பட்ட ரீதியாகவும் மற்றவர்களுடன் பேசி பல முயற்சிகளை எடுத்து வருகின்றோம். இது ஒரு தனி ஒரு மனிதன் செய்யக்கூடிய விடயமல்ல. அன்று இருந்த அரசியலுக்கும் இன்றுள்ள அரசியலுக்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆனால், எல்லேலாருமாக ஒற்றிணைந்து ஒற்றுமை முயற்சியை முன்னெடுத்து எல்லா கட்சிகளின் மத்தியிலும் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். ஆகக் குறைந்தது, தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள அனைத்து கட்சிகளும் நாங்கள் ஒற்றமைப்பட்டு ஒன்றுபடுவோமாக இருந்தால், அடுத்த கட்டமாக ஒரு பலமான தேசிய அரசியல் அமைப்பாக வந்து தமிழ் மக்களின் பிரச்னைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே மாவை சேனாதிராசா, சுரேஷ் பிறேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்ற அனைவரும் இணைந்து இந்த முயற்சியை எடுக்க வேண்டும்- என்றார். (ஐ)

## சுன்னாகத்தில்...

கர்ப்பப்புனை பிள்ளையார் கோயில் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த சம்பவம் பதிவானது.

வெடிப்பு இடம்பெற்ற வீட்டில் எரிவாயு சிலிண்டர் சமையலறையின் வெளிப்புறமாக வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே அடுப்பு வெடித்து சிதறியது. இதனால், சமையலறையில் சிறுசிறு சேதங்கள் ஏற்பட்டன என்று தெரிய வருகின்றது.

இவ்வாறு எரிவாயு அடுப்பு வெடித்து சிதறுவது வடக்கில் இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். நேற்று முன்தினம் கிளிநொச்சி - திருவையாறு பகுதியிலும் வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது.

இதேபோன்று, நேற்று கேகாலை கஹட்டபிட்டி பிரதேசத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த நிலையில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது. சிலிண்டருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாததால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, புத்தளம் ஆராய்ச்சி கட்டுவை பகுதியில் சிறிய சிலிண்டர் ஒன்று நேற்று தீப்பற்றியது. அதனை, வாய்க்காலில் தூக்கி எறிந்தமையால் சேதம் தவிர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ)

## கொரோனா...

முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 305 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## வடக்கு, கிழக்கு...

வெளியேற வேண்டும்", என்று சிவகுரு ஆதீன குருமுதல்வர் வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் செய்தியாளர் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரவித்து நேற்று நடந்த போராட்டத்தில் பங்கேற்றே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

மேலும், ஊடக சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் நான்கு தூண்களிலே ஒன்றாகும். அந்த ஊடக சுதந்திரம் எந்த தேசத்திலே மறுக்கப்படுகின்றதோ அங்கே அராஜகம், பயங்கரவாதம் தலைதூக்கி ஆடுகின்றது. ஆகவே, எங்களுடைய வடக்கு, கிழக்கு தமிழர்களின் மரபுவழித் தாயகத்திலே, சுயநிர்ணய உரிமையைக் கொண்டிருக்கக் கூடிய தமிழினம், தமிழ்த் தேசிய அடிப்படையிலே அறவழியிலே பயணித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழினம் தனது நீதிக்காக நீண்ட நெடும் பயணத்தில், பல ஊடகவியலாளர் மீதான அடக்குமுறைகள், அராஜ கங்கள், பயங்கரவாதங்கள் என்பவற்றைக் கண்டிருக்கின்றது. அவ்வாறான அடக்குமுறைகளும் அராஜகங்களும், பயங்கரவாதங்களும் அரச இயந்திரங்களான இராணுவம், பொலிஸார் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் ஊடாக காலங்காலமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

அந்தவகையிலே, ஊடகவியலாளர் விஸ்வச்சந்திரன் ஊடகசுதந்திரத்தையும், நடுநிலைமையையும், தர்மத்தையும் பேணிப் பாதுகாத்து அச்செய்திகளை சரியான விதத்திலே முன்னெடுத்துவரும் போது அவர்மீது காட்டுமிராண்டித்தனமாக, பயங்கரவாதமாக பனைமட்டையிலே முட்கம்பியைச்சுற்றி இராணுவத்தினர் தாக்கியிருக்கின்றார்கள். அதனைக் கேட்கும்போதே மனம் மிகுந்த வேதனை அடைகின்றது.

இந்த அராஜகங்கள் அனைத்தையும் மேற்கொள்கின்ற இந்த இராணுவம் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் தேவையில்லை. தமிழர் தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என கடுமையான வேண்டுகோளாக முன்வைக்கிறேன் - என்றார். (ஐ)

## கொத்து ரொட்டியின்...

அதிகரிக்கப்பட்டதாக சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை ஒரு கிலோகிராம் 17 ரூபாயால் அதிகரித்தையடுத்தே சிற்றுண்டிகளின் விலையும் அதிகரிக்கப்படுவதாக அந்த சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, கொத்து ரொட்டி 10 ரூபாயாலும், கிழங்கு ரொட்டி, றோல்ஸ், பராட்டா ரொட்டி போன்ற சிற்றுண்டிகள் 5 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பாணின் விலை...

ரூபாயால் அதிகரித்தது.

450 கிராம் எடை கொண்ட ஒரு இறாத்தல் பாணி விலையே இவ்வாறு 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டதாக சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

ஒரு கிலோகிராம் மாவின் விலை 17 ரூபாயால் அதிகரிக்கப்பட்டதாக மொத்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அறிவித்த நிலையிலேயே பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அச்சுறுத்தி மதம்...

அதற்கு அவர் மறுத்ததுடன், அவர்களை அங்கிருந்து செல்லும்படியும் கேட்டுள்ளார். ஆனால், அங்கு நின்ற அவர்கள் அவரின் மதம் தொடர்பில் அறிந்து கொண்டு அவர் வணங்கும் தெய்வத்தை நிந்தை செய்ததுடன், அவரை சபிப்பது போன்றும் நடந்தனர். மது வெறியில் நின்ற அவர்கள் அவரை தொடர்ச்சியாக அச்சுறுத்தும் பாணியில் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், அவரை தகாத வார்த்தைகளாலும் திட்டினர் என்று கூறப்படுகின்றது.

நீண்ட நேரத்தின் பின்னரே அங்கிருந்து சென்றனர். எனினும், அவர்களின் செயல்பாடுகளால் அச்சமடைந்த அவர் அவசர பொலிஸ் இலக்கத்துக்கு அழைப்பு எடுத்து தமக்கு ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் குறித்து முறைப்பாடு செய்தார். இதைத் தொடர்ந்து மாங்குளம் பொலிஸார் விசாரணை நடத்தி சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் மூவரை கைது செய்துள்ளனர் என்று முறைப்பாட்டாளருக்கு தெரிவித்தனர். அத்துடன், அவரிடம் இருந்து வாக்குமூலத்தையும் பெற்றுச் சென்றனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## உண்மையான...

நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறியதாவது,

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒன்றுமில்லையென பொதுஜன பெரமுனவின் முக்கியமான ஒருவர் என்னிடம் கூறினார். இந்த அரசால் நாட்டுக்கு என்ன நடந்தது? இதை யாரிடம் சொல்வது? நாட்டையும் நாசமாக்கி அரசியலையும் நாசமாக்குகின்றனர்.

69 இலட்சம் பேரில் 60 இலட்சம் பேர் வேதனையில் இருக்கின்றனர். அமைச்சர்கள்மீது மக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர். இந்த தேவைக்கில்லாத ஜனநாயகம் எல்லாம் தேவையில்லை. நாட்டின்மீதும் மக்கள்மீதும் அன்பு இருக்குமாயின் ஜனாதிபதி கோட்டாபய, 10 வருடங்களுக்கு நாட்டை இராணுவத் திடம் ஒப்படைக்க வேண்டுமென கேட்கிறேன் - என்றார். (ஐ)

## நெடுந்தீவிலும்...

பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்திம் சனிக்கிழமை, வடமராட்சி பிரதேசத்தில் மணல்காடு மற்றும் வல்வெட்டித்துறை கடற்கரை பகுதிகளிலும், இரு சடலங்கள் கரையொதுங்கி இருந்தன. இந்த இரு சடலங்களும் இனங்காணப்படாத நிலையில், நேற்று மூன்றாவதாக ஒரு சடலம் கரையொதுங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையை...

தல்கள் குறித்து ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஐக்கிய தேசிய கட்சி இதனை தெரிவித்துள்ளது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலேயோ அல்லது பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையிலேயோ உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு அவ்வேளை ஜனாதிபதியாக பதவிவகித்தவரோ பிரதமராக பதவிவகித்தவரோ அல்லது அமைச்சர்களோ காரணம் என தெரிவிக்கப்படவில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு காரணமற்றவர்களையே ஜனாதிபதி குற்றம் சாட்டுகின்றார், நீதித்துறை குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாதவர்களின் சிவில் உரிமையை பறிக்கப்போவதாக தெரிவிக்கின்றார் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இது ஜனநாயகத்தின் அடிப்படை கோட்பாடுகளிற்கு முரணானது என தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சி இது அரசமைப்பின் சில பிரிவுகளை மீறுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது. அரசமைப்பை பின்பற்றப்போவதாக ஜனாதிபதி செய்துள்ள சத்தியப்பிரமாணத்திற்கு இது முரணானது எனவும் ஐக்கியதேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை இந்த அரசாங்கத்தின் கீழ் அமெரிக்க ஜனாதிபதியின் ஜனநாயக மாநாட்டிற்கு அழைக்கப்படாதது ஆச்சரியமளிக்கவில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

## மருத்துவபீட மாணவன் மரணம்

# விசாரணை குழுவை மாற்றக்கோரி பிரதமர் மஹிந்தவுக்கு கடிதம்!

வடமராட்சி, நவ. 29

பிரதமரின் உத்தரவிற்கு அமைய வடக்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனின் மரணம் தொடர்பிலான விசாரணைக் குழுவில் குற்றவாளிகளின் உறவினர், நண்பர்கள் இடம் பெற்று இருப்பதனால் முக்கியமான தகவல்கள் பல மறைக்கப்பட்டுள்ளன என்று மரணமான மாணவரின் சகோதரன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுப்பிய அவசர மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மூன்றாம் வருட மாணவனாக கல்வி கற்று வந்த துன்னாலையை சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன் கடந்த ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி அவர் தங்கியிருந்த, கோண்டாவில் கிழக்கிலுள்ள வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவரின் மரணம் கொலையாக இருக்கலாம் என்று சந்கேம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான வீரசிங்க என்பவர் எந்த விசாரணைகளையும் நடத்தவில்லை என்றும் குற்றஞ் சாட்டப்பட்டது.

இதையடுத்து மாணவனின் சகோதரன் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு செயலர், பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோருக்கு தமக்கு நீதி வேண்டி கடிதம் ஒன்றை அனுப்பினார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு பணித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, நியமிக்கப்பட்ட விசாரணை குழுவில் மரணமான மாணவரின் கொலைக்கு காரணமானவர்கள் என்று கூறப்படுபவர்களின் உறவினர்கள், நண்பர்கள் இருக்கின்றனர். அவர்களால் தகவல்கள் மறைக்கப்படுகின்றன. எனவே, அவர்களை நீக்கி விசாரணைகளை முன் கொண்டு செல்ல உதவுமாறு அனுப்பப்பட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

(ஐ -2)

## மரண அறிவித்தல்



தோற்றம்
02 - 02 - 1942

மறைவு
22 - 11 - 2021

### திருமதி அன்ரன் ராஜரட்ணம் பிரான்சிஸ்கா
(தங்கம்)

ஊர்காவற்றுறை கொத்திக்குளம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Colombes ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் ராஜரட்ணம் பிரான்சிஸ்கா அவர்கள் 22.11.2021 திங்கட்கிழமை அன்று பிரான்ஸில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அந்தோணி - மரியம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தோமஸ்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்ரன் ராஜரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், றெஜினோல்ட்(கனடா), ஜெயா(பிரான்ஸ்), ஜெனோ(பிரான்ஸ்), ஜெனி(இலங்கை), ஜெகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜான்சி(கனடா), நிர்மலா (பிரான்ஸ்), சாமினி(பிரான்ஸ்), ஜெனிஸ்ரா(இலங்கை), சுவிந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சேவியர், சின்ராசா, தவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அயந்பிரதிப், சாறோனி, ஆரோன், எறிக், துஷாரா, சாம், ஜஸ்மீன், ஏஞ்சல், யோவாஸ், அபியூக், அபித்தா, யோயல், யோசியா, யபிறியோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

**பார்வைக்கு வைக்கும் இடம், நேரம்**

25.11.2021 வியாழக்கிழமை மாலை 3:00 மணிதொடக்கம் 4:00 மணிவரை
26.11.2021 வெள்ளிக்கிழமை மாலை 3:00 மணிதொடக்கம் 4:00 மணிவரை
27.11.2021 சனிக்கிழமை மாலை 3:00 மணிதொடக்கம் 4:00 மணிவரை
29.11.2021 திங்கக்கிழமை மாலை 3:00 மணிதொடக்கம் 4:00 மணிவரை

CIMETIÈRE INTERCOMMUNAL DES JONCHEROLLES 95 RUE MARCEL SEMBAT, 93430 VILLETANEUSE, FRANCE

**ஆராதனை - இடம், நேரம்**

30.11.2021 செவ்வாய்கிழமை மு.ப.10:00 மணிதொடக்கம் 11:00 மணிவரை, பின்னர் 11:00 மணி தொடக்கம் 1:00 மணிவரை

**அடக்கம் - இடம், நேரம்**

30.11.2021 செவ்வாய்கிழமை 2:00 மணிதொடக்கம் 2:30 மணிவரை, Communal Cemetery Cherry Orchard 25 Rue de la Cerisaie, 92700 Colombes, France எனும் முகவரியில் அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**றெஜினோல்ட் (மகன்)** - +16472 1927 41
**ஜெனி (மகள்)** - +947 78 48 9995
**ஜெயா (மகன்)** - + 33660 197652
**ஜெனோ (மகன்)** - +337 53 85 3064

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வரவு - செலவுத் திட்டத்தை சுதந்திரக் கட்சி ஆதரிக்குமா?

### முடிவெடுக்கவில்லை என்கிறார் பியதாச

கொழும்பு, நவ. 29

"வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதனை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய செயல் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்கப்பெறவில்லை. நாட்டில் அனைத்துப் பொருட்களினது விலைகள் தொடர்ந்து அதிகரிக்கின்றது.

ஆளும் கட்சியில் உள்ள சிலர் தமது கட்சி றுப்பினர்களைக் கட்சியை விட்டு வெளியேறும்படி பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர்.

முக்கியமான தருணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உரிய தீர்மானங்களை எடுக்கும்" - என்றார். (இ)

## வடமாகாண மரநடுகை மாதம்
## 29 கார்த்திகை 2021

**"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பது மரங்களே"**

- கௌதம புத்தர்

### கல்வி tv CHANNEL-1

**29.11.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**29.11.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
29.11.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இலங்கைமீதான அழுத்தங்களின் இலக்கு?

அரசியல் தீர்வில் அமெரிக்காவின் ஆதரவை பெறும் நோக்கிலேயே, எமது அமெரிக்க பயணம் இடம்பெற்றது. இந்த அடிப்படையிலேயே மூவர் அடங்கிய சட்ட நிபுணர் குழு இராஜாங்க திணைக்களத்தில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டது. இதுவரையில் இந்தியா மட்டுமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்தி வருகின்றது. இந்தியாவும் அமெரிக்காவும் சேர்ந்து இயங்கும் வகையிலான அணுகுமுறை ஒன்றை ஏற்படுத்தவே நாங்கள் முயற்சிக்கின்றோம். அமெரிக்க பயணம் தொடர்பில் சுமந்திரனின் விளக்கம் இப்படித்தான் இருக்கின்றது.

அமெரிக்காவையும் இந்தியாவையும், ஒரு நேர்கோட்டில் எவ்வாறு புரிந்து கொள்வது? அமெரிக்காவும் இந்தியாவும் முன்னரைவிடவும் நெருங்கிச் செயல்படுகின்றன. குறிப்பாக நரேந்திர மோடி தலைமையிலான பி. ஜே. பி. அரசாங்கம், முன்னைய இந்திய ஆட்சியாளர்களை விடவும், அதிகம் அமெரிக்காவுடன் நெருங்கிச் செயல்படுகின்றது. இதனை பல இந்திய வெளிவிவகார நிபுணர்களும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

அமெரிக்க - இந்திய கூட்டு நகர்வுகளின் அடிப்படையான இலக்கு சீனாவை எதிர்கொள்வதாகும். ஆசியாவில் தன்னையொரு மேலாதிக்க சக்தியாக நிலைநிறுத்தும் கனவுடன் நகரும் சீனாவை - ஓர் எல்லைக்குள் முடக்குவதுதான் அமெரிக்க மூலோபாயத்தின் இலக்கு. ஏனெனில், சீனா அதன் மேலாதிக்க கனவில் வெற்றிபெறுமாக இருந்தால், அதன் பின்னர் அமெரிக்கா, ஆசியாவில் ஒரு பிரதான சக்தியாக நிலைபெற முடியாது. உலகின் பல சக்திகளை புறம்தள்ளி இந்த இடத்திற்கு வந்திருக்கும் அமெரிக்கா, சீனாவின் கனவை ஒருபோதும் அனுமதிக்காது. அதனை முறியடிக்கும் வகையில் அனைத்து அஸ்திரங்களையும் பயன்படுத்தும். இதில் ஓர் அஸ்திரம்தான் அமெரிக்க - இந்திய மூலோபாய கூட்டு. அமெரிக்காவின் இந்தோ - பசுபிக் மூலோபாயம் என்பதே இந்தியாவை அடிப்படையாகக் கொண்டதுதான். இதனால்தான் இதனை ஹொலிவூட்டிலிருந்து பொலிவூட்டுக்கு -என வர்ணிப்பர்.

இப்படியான, அமெரிக்க - இந்திய மூலோபாய நகர்வுகளில் இலங்கை எவ்வாறு பொருந்திப் போகின்றது? இதுவரை காலமும் இலங்கையில் செல்வாக்குச் செலுத்திய பிரதான நாடாக இந்தியாவே இருந்தது. ஆனால், இப்போது இந்தியாவின் இடத்தை பங்குபோடுவதில் சீனாவும் போட்டியிடக் கூடிய நிலையில், கால்பதித்துவிட்டது. சீனாவின் பிரசன்னமானது, அடிப்படையில் பொருளாதார நலன்கள் சார்ந்ததாக இருந்தாலும்கூட, பொருளாதார நலன்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கு இராணுவ நகர்வுகளும் தவிர்க்க முடியாதவை. இப்போதில்லாவிட்டாலும்கூட - எதிர்காலத்தில் ஒரு யுத்த சூழல் ஏற்படுமாக இருந்தால், அப்போது சீனா எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை இப்போது யாராலும் ஊகிக்க முடியாது. ஒருவர் மற்றவரின் உள் நோக்கத்தை அறிந்திருக்க மாட்டார் என்னும் அடிப்படையில்தான் வல்லரசுகளின் பாதுகாப்பு பொறிமுறைகள் திட்டமிடப்படுகின்றன.

இந்த விடயங்களை தொகுத்து நோக்கும்போதுதான் அமெரிக்க - இந்திய கூட்டு நகர்வுகளும் இலங்கையும் ஓரிடத்தில் சந்திக்கின்றன. அடிப்படையில் இலங்கைமீதான அமெரிக்க ஆர்வங்கள் மிகவும் மட்டுப்பட்டவை. இந்தியாவின் ஓர் அயல்நாடு - முக்கியமாக உடனடி அயல்நாடு என்னும் அடிப்படையில்தான் அமெரிக்காவின் அணுகுமுறைகள் அமைந்திருக்கும். இந்தியா பிராந்திய ரீதியில் பலவீனமடைவது, அமெரிக்காவின் ஆசியா நோக்கிய மூலோபாய நகர்வுகளை பலவீனப்படுத்திவிடும்.

எனவே, சீன நகர்வுகளால் இந்தியா பலவீனமடைந்துவிடக்கூடாது. இதுதான் இந்திய - அமெரிக்க கூட்டு நகர்வின் பிரதான இலக்கு. இந்த அடிப்படையில்தான் - மாலைதீவின் ஆட்சி மாற்றத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயல்பட்டன. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் போதும் அவ்வாறானதொரு கூட்டிணைவு இருந்ததாகப் பரவலாக நம்பப்படுகின்றது. இதேபோன்று 2015இல், மியன்மாரிலும், அமெரிக்காவுக்கு ஆதரவான ஆங்சான் சூகி ஆட்சியை கைப்பற்றியிருந்தார். ஆனால், இரண்டு நாடுகளிலுமே தற்போது நிலைமைகள் தலைகீழாகியிருக்கின்றன.

இந்த அனுபவங்களிலிருந்து நோக்கினால் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து எவ்வாறு நமக்கானதோர் அரசியல் தீர்வை பெற்றுத்தர முடியும்? அந்தத் தீர்வை ராஜபக்ஷக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அமெரிக்கா எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்? சிங்கள ஆட்சியாளர்களை முற்றிலுமாக நிலைகுலைந்து போகச் செய்யும் வகையிலான நடவடிக்கைகளை எடுக்குமா? அப்படி எடுத்தால் ஒட்டுமொத்த சிங்கள மக்களும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் எதிராகத் திரும்புவர். மேலும் சீனாவை காதலிப்பர். இதன் மூலம் அமெரிக்க - இந்திய கூட்டு இலக்குகள் நிறைவேறுமா? இந்த விடயங்களை கருத்தில் கொண்டுதான் தமிழர் தரப்புக்கள் சிந்திக்க வேண்டும்.

ஒன்றில் இந்த ஆட்சியாளர்கள் அமெரிக்க - இந்திய நகர்வுகளோடு ஒத்துப்போக வேண்டும் - கூடவே, தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வுக்கு உடன்பட வேண்டும். அவ்வாறு உடன்படாவிட்டால் - அமெரிக்காவோ அல்லது இந்தியாவோ ஓர் எல்லைக்கு மேல் எதனையும் செய்ய முடியாது. அவ்வாறானதொரு சூழலில் ஆட்சி மாற்றத்திற்காக காத்திருப்பதை தவிர வேறு தெரிவுகள் இருக்காது.

# ‘ஸ்கொட்லண்ட் யார்ட்’டின் அதிரடித் தீர்மானம்!

**- அலசுவது இராஜதந்திரி -**

இலங்கை பொலிஸாருக்கு சர்வதேச பொலிஸ் நிறுவனமான ஸ்கொட்லண்ட் யார்ட் (Scotland Yard) நிறுவனம் இனிவருங்காலங்களில் பயற்சி வழங்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் ஊடாக ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் நிறுவனம் கொழும்புக்கு இதனை அறிவித்துள்ளது. எதிர்வரும் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் இலங்கை பொலிஸாருக்கு ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் நிறுவனம் வழங்கி வருகின்ற பயிற்சி காலாவதியாகின்றது.

இதன்பின்னர் புதிய பயிற்சிகள் இலங்கை பொலிஸாருக்கு வழங்கப்படுவதை நிறுத்தப் போவதாக ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மோசமடைந்துள்ள மனித உரிமைகள் மீறல்கள் காரணமாகவே இலங்கைப் பொலிஸாருக்கு பயிற்சி வழங்கப்படுவதில் அர்த்தமில்லை எனக் குறிப்பிட்டே ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் நிறுவனத்தின் பிரதம பயிற்சியாளரான இயன் லிவிங்ஸ்ரோன் இந்த இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இந்த மாத ஆரம்பத்தில் பிரித்தானிய மற்றும் ஸ்கொட்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக கடிதமொன்றை ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் நிறுவனத்துக்கும் இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்துக்கும் இலங்கையில் பொலிஸாரால் மனித உரிமைகள் மீறல்களுக்கு உள்ளானவர்களின் முறைப்பாடுகளுக்கு செவிமடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

பிரபல சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணியான தென்னாபிரிக்காவைச்சேர்ந்த யஸ்மின் சூகா இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி நன்கறிந்தவராக இருக்கின்றார். அத்துடன், பல தடவைகள் இதுகுறித்து இலங்கை அரசுக்கு யஸ்மின் சூகா எச்சரிக்கை விடுத்துள்ளார். எனவே, ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாரின் தீர்மானத்தை யஸ்மின் சூகாவும் வரவேற்றுள்ளார்.

இலங்கை பொலிஸார் சித்திரவதை மற்றும் வழக்கு விசாரணைகள் இன்றி தடுத்து வைத்திருந்தல் போன்ற அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரபல புலனாய்வு செய்தியாளரான பில் மில்லர், ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் நிறுவனத்தின் தீர்மானம் பற்றி குறிப்பிட்டபோது, தனது வெளியுறவு கொள்கைகளை ஒரு நாடு தொடர்பாக பிரிட்டன் இலகுவில் மாற்றிக்கொள்ளாது. ஆனால், நீண்டகாலமாக சேகரித்த புலனாய்வுத் தகவல்கள் மற்றும் பிரித்தானிய அரசுக்கு கிடைத்த முறைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையிலேயே ஸ்கொட்லண்ட் யார்ட் நிறுவனம் இலங்கை பொலிஸாருக்கு பயிற்சிகள் வழங்குவதை நிறுத்த முன்வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



ஸ்கொட்லண்ட் பொலிஸ் நிறுவனப் பயிற்சி என்பது மிக நுணுக்கமாக துப்பறியும் தகவல்களை சேகரிப்பதோடு பலதரப்பட்ட பொலிஸ் நிர்வாக நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

இலங்கையில் பொலிஸ் சேவை என்பது பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டதாகும். அத்துடன், சகல இனத்தவர்களும் இலங்கை பொலிஸ் சேவையில் பலதரப்பட்ட தரங்களிலும் பணியாற்றியுள்ளனர். இருந்தபோதிலும் எழுபதுகளின் ஆரம்பத்திலிருந்தே இலங்கை பொலிஸ் சேவை பலதரப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாகியிருந்தது.

இலங்கை பொலிஸ் துப்புத்துலக்கும் பிரிவின் நான்காம் மாடி விசாரணைகள் வட பகுதியில் அக்காலங்களில் கைதாகின்ற தமிழ் இளைஞர்களுக்கு சிம்மசொப்பனமாகவே இருந்தது. மிக மோசமான சித்திரவதைக்கூடமாகவே இந்த நான்காம் மாடி விளங்கியதோடு தகவல்களை கறந்தெடுக்கப் பல மூர்க்கத்தனமான செயல்களை நான்காம் மாடி பொலிஸ் அலுவலர்கள் கையாண்டிருந்தனர் எனவும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் முன்பு குறிப்பிட்டிருந்தனர்.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல. தென்னிலங்கையில்கூட பொலிஸாரின் அத்துமீறல்கள் மோசமாக இருந்துள்ளன என்பதையும் பிரத்தானிய அரசு அறிந்துள்ளது.

இதுதவிர, இலங்கையில் எண்பதுகளில் பிரித்தானியாவில் இருந்து இயங்கும் கூலிப்படையான ‘கீனி மீனி’ இலங்கையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து பல அத்துமீறல்களில் ஈடுபட்டதாகவும் சில மாதங்களுக்கு முன்னர் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

இந்நிலையில் மதிப்புமிக்க ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் நிறுவனத்துக்கு ‘கீனி மீனி’ கூலிப்படை இலங்கை விசேட அதிரடிப்படையுடன் இணைந்து மேற்கொண்ட அத்துமீறல்கள் குறித்த தகவல்களும் கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில், இலங்கையில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்ற பொலிஸ் அத்துமீறல்களுக்கு, இலங்கை பொலிஸாருக்கு பயற்சியளித்தவர்கள் என்ற ரீதியில் சர்வதேச கீர்த்திமிக்க தமது நிறுவனமும் அவப்பெயருக்குள்ளாகி விடக்கூடாதென்ற காரணத்தாலேயே இலங்கைப் பொலிஸாருக்கு பயற்சியளிப்பதை நிறுத்துவதற்கு பிரிட்டனின் ஸ்கொட்லண்ட் யார்ட் நிறுவனம் முன்வந்ததோ என்றும் எண்ணத்தோன்றுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 29 திங்கட்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை - 13**
**நல்ல நேரம் : 6.00 - 7.30**
**ராகு காலம் : 7.30 - 9.00**
**திதி : தசமி**




**மேடம்**
உங்களது பேச்சில் முதிர்ச்சி தெரியும். கலகலப்பான நாள். செலவாகும் என்று நினைத்த விஷயம் குறைந்த செலவில் முடியும். உடன்பிறந்தவர்கள் மூலம் உதவி கிடைக்கும். நல்லவர் நட்பு வரும்.

**இடபம்**
புதிய பொருள் வாங்குவதற்கு இன்று முயற்சி செய்வீர்கள். உங்களின் துணிச்சலான செயல் மற்றவர்களால் பாராட்டப்படும். கடனில் ஒரு பகுதியை அடைப்பதற்கு நல்ல வழி பிறக்கும்.

**மிதுனம்**
இழுபறியாக இருந்து வந்த விஷயம் ஒன்று முடிவடையும். தள்ளிப்போன வழக்கில் தீர்ப்பு சாதகமாகும். தாயாருக்கு இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும்.

**கடகம்**
உங்களை பற்றிய உண்மையில்லாத விமர்சனங்களை புறக்கணியுங்கள். திருப்பம் ஒன்றால் மனம் மகிழும். உற்சாகமாக வலம் வருவீர்கள். ஏமாந்த தொகை கிடைப்பது பற்றிய செய்தி வரும்.

**சிம்மம்**
உறவினர்களுடன் இருந்து வந்த பழைய மனக் கசப்புகள் நீங்கும். பண நெருக்கடிக்கு தீர்வு காண்பீர்கள். கலகலப்பான நாள். நண்பர்கள் இடையே இருந்த பிரச்னை தீரும். யோகமான நாள்.

**கன்னி**
பகை கொண்ட நண்பர், அக்கம்பக்கத்தினரிடம் நல்லுறவு வரும். வாகனத்தில் செல்லும் போது பாதுகாப்பாக செல்லுங்கள். பொருட்கள் வாங்கும் போது சரிபார்த்து வாங்குங்கள்.

**துலாம்**
குழந்தைகள் உங்களின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்விப்பார்கள். பல காலம் தடைப்பட்ட விஷயங்கள் நல்ல விதத்தில் முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**விருச்சிகம்**
புது வேலைக்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பயம் நீங்கும். குடும்பத்தில் ஒருவருக்கு நல்ல வாழ்க்கை துணை ஏற்பாடாகும். பிரச்னை ஒன்றை புதிய அணுகுமுறையால் தீர்ப்பீர்கள்.

**தனுசு**
வாகனத்தை சீர் செய்வீர்கள். சேமிப்பில் ஆர்வம் ஏற்படும். தோல்வி மனப்பான்மையில் இருந்து முழுவதுமாக விடுபடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும்.

**மகரம்**
குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் விலகும். பரபரப்பான நாள்.பணியிட பளுவை குடும்ப நிகழ்வு ஒன்று சரிக்கட்டும். அனைத்து நடவடிக்கைகளிலும் சற்று கவனமாக இருங்கள்.

**கும்பம்**
பேச்சிலும், செயலிலும் மிகவும் கவனமாக இருப்பது நல்லது.உங்களை தவறான வழியில் ஈடுபடுத்துவோரை விலக்குங்கள்.பூர்வீக சொத்தில் ஒரு பங்கு உங்களின் கைக்கு வரும்.

**மீனம்**
உறவினர்களால் ஆதாயம் அடைவீர்கள். பயம் நீங்கும். போராட்டங்கள் குறையும். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். முடிக்கப்படாமல் இருந்த விஷயம் ஒன்றை முனைந்து முடிப்பீர்கள்.

# பிணையில் வெளிவர முடியாதவாறு அ.தி.மு.க. நிர்வாகிகள் மீது வழக்குகள்

## தி.மு.க.மீது ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். கண்டனம்

சென்னை, நவ, 29

அ.தி.மு.க. நிர்வாகிகள் மீது பிணையில் வெளிவரமுடியாத அளவுக்கு பொய் வழக்குகள் போடுவதாக தி.மு.க அரசு மீது அ.தி.மு.க .ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே. பழனிசாமி ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று அவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், "கரூர் மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் கடந்த 22.10.2021 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. மொத்தம் உள்ள 12 மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்களில், கழகத்தைச் சேர்ந்தவர்கள் 8 பேர், தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் 4 பேர் என்ற எண்ணிக்கையில் உள்ளனர்.



தேர்தலை நேர்மையாகவும், நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்த வேண்டும் என்று கழகத்தைச் சேர்ந்த மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். நீதியரசர்கள் தேர்தல் ஆணையத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், தேர்தல் நடத்தும் அதிகாரிக்கும், தேர்தலை நேர்மையாக நடத்தவும், தேர்தலை காணொலி பதிவு செய்யவும் உத்தரவிட்டனர்.

இந்நிலையில், தேர்தலில் தோற்றுவிடுவோம் என்று தெரிந்துகொண்ட மாவட்ட அமைச்சர் செந்தில்பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக்குமார் தூண்டுதலின் பேரில், அரசு அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகளை வைத்து, கழகத்தைச் சேர்ந்த மாவட்ட ஊராட்சிக் குழு வட்டார உறுப்பினர்களை மிரட்டியும், அச்சுறுத்தியும் வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் தி.மு.கவில் சேரவில்லை என்றால், அவர்கள் மீது பிணையில் வெளியில் வர முடியாத பிரிவுகளில் பொய் வழக்குகள் தொடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், அவர்கள் தொழில் செய்ய முடியாத அளவிற்கு தி.மு.கவினர், அதிகாரிகளை வைத்து மிரட்டியும் வருகின்றனர். நேர்மையாக இருக்க வேண்டிய அரசு அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் தி.மு.கவிற்கு ஆள் சேர்ப்பது வெட்கப்பட வேண்டிய ஒன்று. மேலும், அரசியல் ரீதியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சந்திக்க முடியாத திராணியற்ற தி.மு.கவை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று அதில் தெரிவித்துள்ளனர்.

# நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டி

## சீமான் அறிவிப்பு

சென்னை, நவ. 29

தமிழகத்தில் விரைவில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலிலும் தனித்துப் போட்டியிடுவோம் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் என்று சீமான் அறிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்ட நாம் தமிழர் கட்சியின் சார்பில் திருப்பூரில் மாவீரர் நாள் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்த சீமான் திருப்பூரில் உள்ள ஒரு விடுதியில் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-



"தமிழர் இன வரலாற்றில் மறக்க முடியாத நாள் மாவீரர் நாள். விடுதலைக்காக தங்கள் இன்னுயிர் ஈர்ந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை போற்றும் புனிதநாள். உலகெங்கும் உள்ள தமிழ் இன மக்கள் இந்த நாளை போற்றி வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நாம் தமிழர் கட்சி இதை சடங்காக கடைபிடிப்பதில்லை. எங்களுக்குள் இருக்கிற இன உணர்வு, மான உணர்வு, போராட்ட உணர்வை இருமடங்காக்கிக் கொள்ளும் ஒரு வாய்ப்பாக இதை பயன்படுத்திக்கொள்கிறோம்.

தமிழர்கள் பெருமையோடு வாழ வேண்டும் என்பதற்காக தங்கள் உயிரை கொடையாக கொடுத்தவர்கள் எங்கள் மாவீரர்கள். உலக வரலாற்றில் எந்த இனத்திலும் நடந்திராத மாபெரும் புரட்சி. எனவே மலர் தூவி, ஈகை சுடர் ஏற்றி மாவீரர்களை போற்றுகிற நாளாக கடைபிடிக்கிறோம்.

ஏற்கனவே நடந்த ஊரக உள்ளாட்சி தேர்தலில் தனித்து போட்டியிட்டோம். வரும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலிலும் தனித்துப்போட்டியிடுவோம்" என அவர் கூறினார்.

# ஆறு நாடுகளிலிருந்து வருபவர்களை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை

## தமிழக விமான நிலையங்களில் கடும் கண்காணிப்பு

சென்னை, நவ. 29

தென் ஆப்பிரிக்கா, சீனா, போட்ஸ்வானா, ஹொங்கொங், பிரேசில், இத்தாலி போன்ற வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் அனைவரும் வீட்டுத் தனிமையில் தனிமைப்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தமிழக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நேற்று தமிழகம் முழுவதும் 12 வது கோவிட் மெகா தடுப்பூசி சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. 10க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்கின்ற நிலையில், இந்தத் தடுப்பூசி முகாம்கள் தொடங்கப்பட்ட காலை முதல் பொதுமக்கள் கலந்து கொண்டு தடுப்பூசி செலுத்தினார்கள்.

இந்நிலையில் இது குறித்து பேட்டியளித்த அமைச்சர் மா. சுப்பிரமணியன் கூறியதாவது:

தமிழக முதல்வர் ஏற்படுத்திய விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணியை ஓர் இயக்கமாக நடத்த உத்தரவிட்டதன் அடிப்படையில் தமிழகத்தில் கோவிட் மெகா தடுப்பூசி முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இது ஒரு இயக்கமாக தற்பொழுது நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் 78 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்தாமல் உள்ளனர். அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையில் 12ஆவது தடுப்பூசி முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

ஒரு சில உலக நாடுகளில் கொரோனா பெருந்தொற்று அதிகரித்து வரும் நிலையில் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது, குறிப்பாக தென்னாபிரிக்கா, சீனா, போட்ஸ்வானா, ஹாங்காங், பிரேசில், இத்தாலி போன்ற வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை கண்காணித்து பரிசோதனை மேற்கொண்டு, அறிகுறி காணப்பட்டால் அவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவிலிருந்து வரும் அனைவரும் வீட்டு தனிமையில் தனிமைப்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் அமைச்சரின் அறிவுறுத்தலின்படி

# பொலிஸார், இராணுவம் இணைந்து வீதிப் பாதுகாப்பில் ஈடுபடத் திட்டம்!

கிளிநொச்சி, நவ. 29

**கிளிநொச்சியில் அடிக்கடி ஏற்பட்டுவரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு சுற்று வட்டம் அமைப்பதற்கோ, சமிக்ஞை விளக்குகள் பொருத்துவதற்கோ காலதாமதமாகலாம். இதனால், உடனடியாக பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து வீதிப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்தியுள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அண்மையில் இவ்வாறு, இடம்பெற்ற விபத்து ஒன்றால் மாணவி ஒருவர் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து விபத்துக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பல தரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிச் சமிக்ஞைகளை விரைவாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்த நிலையில், "டிப்போ சந்தியில் சுற்றுவட்டம் அமைப்பதில் இடச்சிக்கலும், சட்டச் சிக்கல்களும் இருக்கலாம் என்பதால், அதனைச் செய்துமுடிக்க காலதமாதமாகலாம் என்பதைச் சுட்டிக் காட்டி, அதுவரையில் காத்திருக்காமல் பரந்தன் சந்தி முதல், முறிகண்டி வரையில் ஏ9 வீதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோருடன், மாவட்ட செயலாளருடன் உடனடியாக கலந்



துரையாடல் நடத்தி இதனை இன்று திங்கட்கிழமை முதலே நடைமுறைப்படுத்துமாறும் அவர் மேலும் பணிப்புரை விடுத்தார். (ஐ)

## 'நொண்டி நாடகம்' கூத்து நூல் வெளியீடு

ஈழத்தின் பழமையான கூத்துக்களில் ஒன்றான "நொண்டி நாடகம்" -தென்மோடிக் கூத்து நூல் இன்று திங்கட்கிழமை மாலை மணிக்கு வட மாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் செம்மணி வீதியிலுள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர். திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

வெளியீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப் படிப்புக்கள் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸூம் அறிமுகவுரையை பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை ஆசிரியரும் எழுத்தாளருமான ந. குகபரனும் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையை நூலின் பதிப்பாசிரியரும். யாழ்ப்பாண கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமான யோ.யோண்சன்ராஜ் குமார் நிகழ்த்தவுள்ளார். (ஐ)



## 'இகோஸ்டீம்' நிறுவன தொழிற்சாலைக்கு இரு அதிகாரிகள் கண்காணிப்பு விஜயம்

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கையிலேயே சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு தயாரிக்கும் முதல் நிறுவனமான யாழ்ப்பாணத்தின் இகோஸ்டீம் நிறுவன தொழிற்சாலைக்கு அதிகாரிகள் கண்காணிப்பு விஜயம் செய்தனர்.

சூரிய, காற்று, நீர் மின் மற்றும் திட்ட அமுலாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஹேமந்த சமரகோன், இலங்கை மீள்புதுப்பிக்தக்க சக்திவலு அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் சேபாலவும் மற்றும் அதிகாரிகளும் நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயம் செய்தனர்.

அவர்கள் அங்கு, 'இகோஸ்டீம்' சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு உற்பத்தி பற்றிய விடயங்கள் தொடர்பாகக் கேட்டு அறிந்து கொண்டதுடன், உற்பத்தியை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு ஆலோசனைகளையும் வழங்கினர். அத்துடன், தம்மால் எதிர்காலத்தில் வழங்கப்படக்கூடிய ஆதரவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்கள்.

## அறநெறி பாடசாலைகளுக்கு நூலகம்; யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 200 ஆவது பிறந்தநாளையும் 192ஆவது குருபூசை தினத்தையும் முன்னிட்டு அறநெறி பாடசாலைகளில் நூலகம் அமைக்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வை நல்லூர் நாவலர் ஞாபகார்த்த மண்டபத்தில் பிரதமரின் இந்து மத விவகார அலுவலருக்கான இணைப்பாளர் பாபு சர்மா நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

ஆறுமுக நாவலரின் 200ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு - முக்கியமாக 192ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு நாவலர் பிறந்த மண்ணில் இலங்கை பிரதமரின் அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு பூராகவும் அறநெறிப் பாடசாலைகளில் 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு நூலகம் அமைக்கும்



திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் உமா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம், அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் தனபாலா மற்றும் ஏனைய பிரமுகர்கள் கலந்து கொண்டு இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாவலர் பெருமான் சைவ சமயத்துக்கு ஆற்றிய பணிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன. இதேவேளை, ஆறுமுக நாவலரின் இரண்டாவது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவருக்கு முத்திரை வெளியீடு செய்ய பிரதமரின் அறிவுறுத்தலின்படி ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 'தோழர் ஆனந்தி'க்கு யாழ்ப்பாணத்தில் நேற்று அஞ்சலி!

யாழ்ப்பாணம், நவ. 29

காந்தீயம் அமைப்பின் செயல்பாட்டாளரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) அதிசிரேஷ்ட உறுப்பினரும் பொதுச் செயலாளருமான அமரர் சுப்பிர மணியம் சதானந்தனின் (தோழர் ஆனந்தி அண்ணர்) நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் நாச்சிமார் கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பா. கஜதீபன் தலைமை



யில் மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் திருமதி சதானந்தன் நினைவுச் சுடரை ஏற்றி வைத்தார்.

புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், சதானந்தனின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து கழகத்தின் மத்திய குழு உறுப்பினர் குரு, வடமாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே சிவஞானம், தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் எம். கே சிவாஜிலிங்கம், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி தலைவர் சுகு சிறீதரன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினார்கள்.

நிகழ்வில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உபதலைவர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள், உறுப்பினர்கள், கட்சியின் நகரசபை பிரதேச சபை தவிசாளர்கள், அங்கத்தவர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் நகரசபை உறுப்பினர்கள், தோழர் ஆனந்தி அண்ணரின் உறவினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# 1900 ஏக்கர் விவசாய காணிகளை முல்லைத்தீவில் சுவீகரிக்க திட்டம்!

## மணலாறில் தமிழரின் எஞ்சிய நிலமும் பறிபோகும் ஆபத்து

முல்லைத்தீவு, நவ. 29

**முல்லைத்தீவு மாவட்டத்தின் சூரியன் ஆற்றுப்பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 1900 ஏக்கர் விவசாய காணிகளை மகாவலித் திட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

1970 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் சூரியன் ஆற்றுப்பகுதியில் தலா 10 ஏக்கர்கள் வீதம் 190 குடும்பங்களுக்கு 1900 ஏக்கர்கள் விவசாயக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அதற்கான காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

போரின் பின்னரான சூழலில் உருவாக்கப்பட்ட வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டதாக 'கலம்பவெவ என்ற கிராமம் உருக்கப்பட்டது. இந்தக் கிரமத்தை உருவாக்குவதற்காக சூரியன் ஆற்றுப் பகுதியில் உள்ள விவசாயக் காணிகளுக்கு அடுத்துள்ள தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதியே சுவீகரிக்கப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில், குறித்த 'கலம்பவெவ' கிராமத்திற்கு அடுத்ததாகவுள்ள எஞ்சியுள்ள சூரியன்ஆற்றுப் பகுதி விவசாயக்காணிகளையும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மகாவலி திட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களுக்கான நிலப்பரப்பை வழங்க வேண்டியுள்ளதால் இந்தப் பகுதி அவசியமாக உள்ளதாக குறிப்பிடப்பட்டு அதற்காக ஏற்கனவே பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட இப்பகுதிக்கான காணி அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யுமாறு கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை கடிதத்தை முல்லைத்தீவு மாவட்டத்தைத் தளமாக கொண்டு செயல்படும் மகாவலி வதிவிடத் திட்ட முகாமையாளர், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க. விமலநாதனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

முன்னதாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆமையன் குளம், மற்றும் முந்திரிகைக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள 850 ஏக்கர்கள் நீர்பாசன நடவடிக்கைகளுக்கு தேவையாக உள்ளதெனக் கூறி சுவீகரிக்கப்பட்டது. பின்னர் ஆமையன்குளத்திற்கு கிரிபென்வெவ என்றும் முந்திரிகைக் குளத்திற்கு நெலும்வெவ என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு பதிலாக சிங்களக் குடியேற்றங்களே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதேசமயம், தமிழ்த் தரப்பில் எதிர்ப்புக்கள் வெளியிட்ட போதும் பொதுமக்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

அதன்பின்னர் சூரியன் ஆற்றுப்பகுதியின் ஒருபகுதி கையகப்படுத்தப்பட்டு அதற்கு கலம்பவெவ என் பெயர் சூட்டப்பட்டு கிரமமாக மாற்றியமைக்கப்பட்டது. நாளடைவில் அப்பகுதி மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலாளர் நிர்வாகத்தினுள் உள்ளீர்க்கப்பட்டு குடியேற்றங்களும் செய்யப்பட்டன.

தற்போது, சூரியன் ஆற்றின் எஞ்சிய விவசாயக் காணிகளையும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியும் சுவீகரிக்கப்படும் பட்சத்தில் மணலாறு பிரதேச செயலாளர் பிரிவு தமிழ் மக்களின் வாழும் மற்றும் வாழ்வாதர நிலங்கள் நோக்கி மேலும் விஸ்தரிக்கப்படும் பேராபத்தான நிலைமை ஏற்படும் என்று அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

# செய்தியாளர்மீது தாக்குதல் முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்!

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த செய்தியாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன், இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து நேற்று முல்லைத்தீவு நகரில் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தின் பல்வேறு ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து, இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஊடகவியலாளர் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், சித்திரவதைகளை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும் ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், சிவகுரு ஆதீன குருமுதல்வர் வேலன் சுவாமிகள், பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், ஆண்டிஐயா புவனேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் கமலநாதன், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சிகளின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# செய்தியாளர்மீது தாக்குதல் மூன்று இராணுவத்தினர் கைது

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தியாளர் விஸ்வசந்திரன்மீது தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தில் இராணுவத்தினர் மூவர் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து சுயாதீன செய்தியாளர் விஸ்வசந்திரன்மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் காயமடைந்த செய்தியாளர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். செய்தியாளர்மீதான தாக்குதலைக் கண்டித்து நேற்று காலை முல்லைத்தீவு நகரில் கண்டனம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று இராணுவத்தினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடும் மழையும் காற்றும் தொடரும்

கொழும்பு, நவ. 29

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகலில் இடியுடன்கூடிய மழை வீழ்ச்சிக்கான சாதகமான வளிமண்டல நிலைமை காணப்படுகிறது. அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பி. ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதேபோல், திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன், நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடும். கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இரணைமடுவின் வான் கதவு திறப்பு நான்கு கிராம மக்களுக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, நவ. 29

இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையால் முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளின் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இரணைமடுக் குளத்தின் நான்கு வான் கதவுகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டன.

தற்போது குளத்தில் இருந்து வெளியேறுகின்ற நீர் கனகராயன் ஆறு வழியாக கடலைச் சென்றடைகின்றது. இதன் காரணமாக, கனகராயன் ஆற்றுப் பக்கமாக தேவையற்ற முறையில் எவரும் செல்ல வேண்டாம். குறிப்பாக, சிறுவர்கள் புதினம் பார்ப்பதற்கு செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கூடுதலான மழை வீழ்ச்சி பதிவாகி, இரணைமடுக் குளத்தின் ஏனைய வான் கதவுகளும் திறக்கப்படும் சந்தர்ப்பங்களில், தாழ் நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் ஆண்டு தோறும் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி நகர் வது போன்று, கூடுதலான மழை வெள்ளம் வருகின்ற போது தற்காப்பு நிலையில் இருக்குமாறும், அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் வான்பாயும் 8 குளங்கள்!

கிளிநொச்சி, நவ. 29

கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 9 பெரிய மற்றும் நடுத்தர குளங்களில் அக்கராயன் குளம் தவிர்ந்த ஏனைய குளங்கள் அனைத்தும் அதன் நீர் கொள்ளளவு அடைவு மட்டத்தை அடைந்து வான் பாய் கின்றன.

25அடி நீர்கொள்ளவு கொண்ட அக்கராயன் குளத்தின் நீர்மட்டம் 24 அடி 5 அங்குலம் ஆக உயர்வடைந்துள்ளது. அத்துடன் அக்கராயன் பிரதேசத்தில் 38.9 மில்லி மீற்றர் மழையும் நாகபடுவான் பிரதேசத்தில் 34.2 மில்லி மீற்றர் மழையும் நேற்று முன்தினம் பதிவானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருவர் பதவி!

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மேலும் இரு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாகத் தரமுயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைய மதிப்பீடுகளையும், நேர்முகத்தேர்வு - தெரிவுக் குழுவின் சிபாரிசுகளையும் பரிசீலனை செய்த பேரவை, மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், நரம்பியல் சிகிச்சை நிபுணருமான மருத்துவர் அஜினி அரசலிங்கம் மருத்துவப் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கணபதி கஜபதி விலங்கியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்குப் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# சிறு கைத்தொழில் முயற்சியாளருக்கு சித்தார்த்தனின் முயற்சியால் உதவி!

மானிப்பாய், நவ. 29

கற்பூர உற்பத்தியில் ஈடுபடும் சிறு கைத்தொழில் முயற்சியாளர் ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனின் முயற்சியால் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இருபாலை கிழக்கு மண்டான்குள வீதியை சேர்ந்த தி. உசாயினி என்ற பெண் தொழில் முயற்சியாளருக்கு இந்த நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனின் முயற்சியால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் லண்டன் கிளை உறுப்பினர்களான தயாமயூரன், முகுந்தன் ஆகியோரின் அனுசரணையில் இந்த நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் உதவி பிரதேச செயலர் திருமதி ச. ராதிகா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் பா. கஜதீபன், வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சி. அகீபன் ஆகியோர் தொழில் முயற்சியாளரிடம் நிதி உதவியை வழங்கி வைத்தனர். (ஐ-5)



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 29

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மன்றம் முன்னெடுத்த நாவலர் குருபூசை நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்து மன்றத் தலைவர் சிவரூபன் "நாவலரும் நாமும்" என்ற பொருளில் உரையாற்றினார்.

இந்த நிகழ்வில், கலாசாலையில் அமைந்துள்ள நாவலர் திருவுருவச்சிலைக்கு பூசை வழிபாடுகள் நடைபெற்றமையைத் தொடர்ந்து மலரஞ்சலியும் இடம்பெற்றது.

கலசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், உபஅதிபர் த.கோபாலகிருஸ்ணன், சிரேஷ்ட விரிவுரையாளர் பொ.சற்குணநாதன், இந்துமன்றக் காப்பாளர் விரிவுரையாளர் த.ஜானகி உள்ளிட்ட பலர் நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

# ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் அரசியல் தீர்வை ஏற்க மாட்டோம்!

## ஐ. நா. உதவி பொது செயலரிடம் கஜேந்திரகுமார் எடுத்துரைப்பு

கொழும்பு, நவ. 29

**இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் எந்தவோர் அரசியல் தீர்வையும் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை என்று ஐக்கிய நாடுகள் உதவி பொதுச் செயலாளரிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. தெரிவித்துள்ளார்.**



தற்போதைய அரசாங்கம் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுவாக்கி சிங்கள - பௌத்த நாடாக இலங்கையை பிரகடனப்படுத்துவதற்கு முயல்வதாகவும் அதனை தடுப்பதற்கு சர்வதேசத்தின் முழுமையான அழுத்தம் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வந்த ஐ. நா. உதவி பொதுச்செயலாளர் காலித் கியாரிக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார், செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் பற்கேற்றனர்.

அத்துடன், இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஐ. நா.விதிவிடப் பிரதிதிநிதி ஹனா சிங்கர் மற்றும் அரசியல் பிரிவைச் சேர்ந்த எட்வேர்ட் ரிஷ் மற்றும் ஜே.பெர்ணான்டோ ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இந்நிலையில் இச்சந்தப்பின் போது, கஜேந்திரகுமார் பொன் னம்பலம், கூறிய விடயங்கள் வருமாறு,

தற்போதைய அரசாங்கமானது, வலுவானதொரு ஒற்றையாட்சியின் கீழ், சிங்கள - பௌத்த குடியரசாக இலங்கையை பிரகடனம் செய்வதற்கான நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக தமிழ் மக்களின் இருப்பில் கைவைத்துள்ளது. குறிப்பாக வர்த்தமான அறிவித்தல்கள், மற்றும் அதிகாரங்களை பயன்படுத்தி காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனைவிடவும் படைகளின் பயன்பாட்டிற்காக காணிகள் கையகப்படுத்தப்படுகின்றன. மேலும், மகாவலி, அபிவிருத்தி என்ற பெயரில் காணிகள் அபகரிக்கப்படுன்றன.

இதனைவிடவும் நீண்டகாலமாக, தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளை தொல்லியல் துறையினர் ஆராய்ச்சி என்ற பெயரில் கைப்பற்றி வைத்துள்ளனர். சில இடங்களில் புத்த சமயம் ஏற்கனவே இருந்தது என்று கூறி அதனை புனித பகுதியாக அறிவித்துள்ளன.

இதனைவிடவும் எல்லை நிர்ணய ஆணைக்குழு ஊடாகவும் தமிழர்களின் தாயகப் பகுதிகள் சூறையாடப்படுகின்றன. விசேடமாக தமிழ் பகுதிகளின் எல்லைக் கிராமங்களில் உள்ள மக்களை வடக்கின் வவுனியா பகுதியோடு இணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிழக்கிலும் இவ்வாறான நிலைமைகள் உள்ளன. இது தமிழர் தேசத்தின் குடிப் பரம்பலை மாற்றியமைக்கும் செயல்பாடாகும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வானது,தேசம் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அதாவது இலங்கையொரு பல்தேச நாடு என்பது அங்கீகரிக்கப்பட்டு சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். அதேநேரம், ஒற்றையாட்சிக்குள் முன்மொழியப்படும் எந்தவொரு தீர்வையும் நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அது தமிழினத்தின் இருப்புடன் தொடர்புடைய விடயம் என்பதால் விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய முடியாது. குறிப்பாக 13ஆவது திருத்தச்சட்டத்தினை உள்ளடக்கிய ஒற்றையாட்சி கட்டமைப்புடனான தீர்வை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என் பதில் உறுதியாக இருக்கின்றோம் -என்று கூறினார். (ஐ)

# 'மலையக அரசியல் அரங்கம்' ஆரம்பம்

நுவரெலியா, நவ. 29,

நுவரெலியா மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அரசியல் செயல்பாட்டாளருமான மயில்வாகனம் திலகராஜ் தலைமையில் 'மலையக அரசியல் அரங்கம்' எனும் பெயரில் புதியதோர்அரசியல் அமைப்பு நேற்று ஞாயிற்றுக் கிழமை தொடங்கப்பட்டுள்ளது .

உதயமாகியுள்ள இவ்வமைப்பானது சமூக அரசியலை இலக்காகக்கொண்டு 'உரிமைசார்' பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. 'அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்குதல், மாவட்ட எல்லைகளைக் கடந்த மலையக அரசியலை முன்னெடுத்தல், கல்வி, சுகாதாரம், அரசியல்சார் உரிமைகளுக்காக குரல் கொடுத்தல் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது' என்று அதன் தலைமை ஒருங்கிணைப்பாளரான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மயில்வாகனம் திலகராஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்து உள்ளதாவது,

"குறித்த அமைப்பானது அரசியல் கட்சியாகவோ அல்லது தொழிற்சங்கமாகவோ அல்லாது சமூக அரசியலை முன்னெடுப்பதற்கான அமைப்பு என்பதால் அதில் எவரும் இணையலாம் எனவும் திலகர் அழைப்பு விடுத்துள்ளார். புதிய அரசியலமைப்புக்கான பணிகள் மற்றும் தேர்தல் முறைமை மறுசீரமைப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் 'அரசியல் சார்' கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு இவ்வாறானதொரு அமைப்பின் தேவைப்பாட்டை உணர்ந்தே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன் 'மாவட்ட எல்லைகளை கடந்த மலையக அரசியல்' என்ற எண்ணக்கரு பிரதான செயல்பாட்டுத் தளமாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

மலையக சமூகத்தின் எழுச்சிக்காக எல்லா வழிகளிலும் பாடுபட்ட மலையக தேச பிதா நடேசய்யர், அவரின் பாரியார் மீனாட்சியம்மாள் ஆகியோரின் படங்களை லட்சினையாகக் கொள்வதன் மூலம் மலையக அரசியலில் ஆண் - பெண் சமவாய்ப்பை ஏற்படுத்த அமைப்பு ஒருமைப் பாட்டைத் தெரிவிப்பதுடன் 'மலையகம் சமூகம் நூற்றாண் டுகால அரசியல் சமூகம் என்பதனையும் அதன் அரசியல் அடையாளம் திட்டமிட்டு மறைக்கப்பட்டு கூலி சமூகமாக காட்ட முயற்சிக்கப்படுகிறது. மலையகத்தின் பிரதிநிதித்துவ அரசியல் 1921 ல் இருந்தே ஆரம்பித்த நூற்றாண்டு பழமை வாய்ந்தது என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் அமைகின்றது' என அமைப்பு குறித்து விளக்கமளித்தார்.

நேற்றைய சந்திப்பில் கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டதுடன் தொடர்ந்து நடைபெற்ற ஊடக சந்திப்பில் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருடன் பிரதான அமைப்பாளர் இராமன் செந்தூரன் செயல் குழுச் செயலாளர் நா.கிருஷ்ண குமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.




**“அகதிகள் தொடர்பிலான உடன்படிக்கையொன்றை இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து கைச்சாத்திடும் பட்சத்தில், தமது தாயகத்திற்கு செல்ல இந்தியாவிலுள்ள பெரும்பாலான இலங்கை அகதிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் தெரிவிக்கிறது. இதற்காக சில நிபந்தனைகளையும் அவர்கள் முன்வைக்கின்றார்கள்.**

# தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர் நாடு திரும்ப விரும்புகிறார்களா?



**ரஞ்சன் அருண்பிரசாத்**

இலங்கை உள்நாட்டு போர் காரணமாக அகதிகளாக இந்தியாவில் வாழ்ந்து வரும் இலங்கையர்களை மீள நாட்டிற்கு அழைத்து வருவதற்கான முயற்சிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். இந்த நிலையில், சென்னையிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கான பிரதி உயர்ஸ்தானிகர் டி.வெங்கடேஸ்வரனுக்கும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் கொழும்பில் பேச்சு ஒன்று இடம்பெற்றது.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை நாட்டிற்கு மீள அழைத்து வருவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக கடற்றொழில் அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்தியாவிலிருந்து அழைத்துவரப்படவுள்ள இலங்கையர்களுக்கு செய்துக் கொடுக்கப்படவுள்ள வசதிகள் குறித்து பிரதி உயர்ஸ்தானிகர், கடற்றொழில் அமைச்சருக்கு விளக்கமளித்துள்ளார்.

அழைத்துவரப்படவுள்ள இலங்கையர்களுக்கான பயண ஏற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தினால் இலவசமாக செய்து கொடுக்கப்படவுள்ளது.

அத்துடன், அவர்களின் பொருட்களை ஏற்றி வருவதற்கான ஏற்பாடுகளும் செய்துக்கொடுக்கப்படவுள்ளன.

இலங்கைக்கு அழைத்து வரப்படுவோரின் செலவுகளுக்காக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதல் கட்டமாக தலா 30,000 ரூபாய் வழங்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அழைத்து வரப்படுவோரை தமது பூர்வீக நிலங்களில் குடியமர்த்துவற்கும், அந்த நிலங்களில் சர்வதேச தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் வீடுகளை அமைத்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகரால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகளுக்கு, அமைச்சர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்களை, அவர்களது பூர்வீக நிலங்களின் குடியமர்த்தி, இயல்பு வாழ்க்கையை தொடர்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க அரசாங்கம் தயார் எனவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கிறார்.

பல்வேறு காரணங்களினால் இந்தியாவின் சிறப்பு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட வேண்டும் என, பிரதி உயர்ஸ்தானிகரிடம், டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.



### அகதிகள் அமைப்பின் பதில்

அகதிகள் தொடர்பிலான உடன்படிக்கையொன்றை இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து கைச்சாத்திடும் பட்சத்தில், தமது தாயகத்திற்கு செல்ல இந்தியாவிலுள்ள பெரும்பாலான இலங்கை அகதிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் தெரிவிக்கிறது.

இந்தியாவை தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழக திருச்சி மாவட்ட ஆலோசகர் செல்வரத்தினம் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த உடன்படிக்கையில் எவ்வாறான விடயங்கள் கையெழுத்திடப்பட வேண்டும் என இலங்கை அகதிகள் விரும்புகின்றார்கள் என்ற கேள்வி எழுப்பினோம்.

இந்தியாவில் சுமார் 30 வருட காலம் வாழ்ந்துள்ளமையினால், தாயகம் திரும்பும் போது தமக்கு இந்திய அரசாங்கத்தினால் உதவித் திட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என உடன்படிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும் என இலங்கை அகதிகள் விரும்புவதாக அவர் கூறுகிறார்.

இந்தியாவில் வழங்கப்படும் ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டத்தை, இலங்கையில் குறிப்பிட்ட காலம் தமக்கு தொடர வேண்டும் என்பதும் உடன்படிக்கையில் உள்வாங்கப்பட வேண்டும்.

அத்துடன், ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை மீள வழங்குவது அல்லது புதிய காணிகளை வழங்குவது குறித்தும் உடன்படிக்கையில் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் வீட்டுத்திட்டம், தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற விடயமும் உடன்படிக்கையில் உள்வாங்கப்பட வேண்டும் என இலங்கை அகதிகள் கோரிக்கை விடுக்கின்றனர். வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படு கிறது.

இலங்கையின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தற்போதைய நிலையில், இந்தியாவிலுள்ள அகதிகள் இலங்கையை நோக்கி வருகை தர சற்று அச்சம் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

அதேபோன்று, தமது குடும்பத்தோடு வாழ்ந்து வரும் அகதிகளில் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் முதலில் தாயகம் திரும்பி, அவரது வாழ்வாதாரம் மற்றும் அவர்கள் வாழ்வதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்ட பின்னர், தமது குடும்பத்தை அழைத்து செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகதிகள் கூறுவதாக அவர் தெரிவிக்கிறார்.

இந்த நிலையில், தற்போது 4000 பேர் இலங்கைக்கு வருகை தர இணக்கம் தெரிவத்துள்ளதாக இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் தெரிவிக்கிறது.

இந்தியா முழுவதும் 106 அகதி முகாம்கள் காணப்படுவதாகவும், அவ்வாறான அகதி முகாம்களில் 58,800 பேர் வாழ்ந்து வருவதாகவும் கழகத்தின் ஆலோசகர் கூறுகிறார்.

இவ்வாறு இந்தியாவில் வாழ்ந்து வரும் அகதிகளில், சுமார் 25,000 பேர் இந்திய வம்வாவளியைச் சேர்ந்த மலையக தமிழர்கள் என அவர் குறிப்பிடுகிறார்.

மலையகத்தைச் சேர்ந்த அகதிகளில் பெரும்பாலானோர் நாடு திரும்பவிரும்பவில்லை எனவும், தமக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என அவர்கள் கோரி வருவதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

### இலங்கை அரசின் திட்டம்

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருவதாக பிரதமரின் இணைப்பு செயலாளரும், தேசிய நல்லிணக்கம் மற்றும் மறுவாழ்வு அலுவலகத்தின் உறுப்பினருமான செந்தில் தொண்டமான் தெரிவிக்கிறார்.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் தனது முயற்சியின் கீழ் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் மிக பெரிய தொழில் பேட்டை மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும், தொழில் பேட்டை உருவானதன் பின்னர், இலங்கைக்கு வரும் அகதிகளுக்கான வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படும் எனவும் அவர் கூறுகிறார்.

அத்துடன், தாயகம் திரும்பும் அகதிகளை மீள தற்காலிக இடங்களில் தங்க வைக்க முடியாது என கூறிய அவர், அகதிகளுக்கான கிராமங்களை அமைக்கும் திட்டத்தை முன்னெடுக்க இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும், தானும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் குறிப்பிடுகிறார்.

இதன்படி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தின் ஸ்தாபகர் எஸ். செ. சந்திரகாசன் ஆகியோருடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளதாக செந்தில் தொண்டமான் தெரிவிக்கிறார். ■



# தலிபான்களின் அதிர வைக்கும் 100 நாள் ஆட்சி

> **“ தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சியைக் கைப்பற்றி நூறு நாள்கள் கடந்துவிட்டன. ஆனால், அவர்கள் சொன்னது போல் எந்த நேர்மறையான மாற்றமும் அங்கு நிகழவில்லை. மாறாக, என்னவெல்லாம் நடந்துவிடக்கூடாது என்று உலக நாடுகள் அஞ்சினவோ, அவைதான் அங்கு அரங்கேறிக்கொண்டிருக்கின்றன!**

“இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோல் இப்போது நாங்கள் இல்லை; இது சரி செய்வதற்கான நேரம். கல்வி கற்கவும், வேலைக்குச் செல்லவும் பெண்களை அனுமதிப்போம். ஊடகச் சுதந்திரம் பாதுகாக்கப்படும். ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானிலும் அமைதியை ஏற்படுத்துவோம். மக்களின் வாழ்வை மேம்படுத்த எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம். உலக சமுதாயம் எங்களை நம்ப வேண்டும்!”

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த புதிதில் உதிர்த்த நம்பிக்கை வார்த்தைகள்தான் இவை!

தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சியைக் கைப்பற்றி நூறு நாள்கள் கடந்துவிட்டன. ஆனால், அவர்கள் சொன்னதுபோல் எந்த நேர்மறையான மாற்றமும் அங்கு நிகழவில்லை. மாறாக, என்னவெல்லாம் நடந்துவிடக் கூடாது என்று உலக நாடுகள் அஞ்சினவோ, அவைதான் அங்கு அரங்கேறிக்கொண்டிருக்கின்றன!

**பெண்களுக்கெதிரான கொடுமைகள்!**

‘தலிபான்கள் ஆப்கனைக் கைப்பற்றியதும், அவர்கள் முதலில் கொண்டுவந்த சட்டமே பெண் சுதந்திரத்துக்கு எதிராகத்தான் இருந்தது. ‘பெண்கள் ‘ஹிஜாப்’ அணியாமலோ, ஆண்களின் துணை இல்லாமலோ வீட்டைவிட்டு வெளியில் வரக் கூடாது’ எனத் தடை விதிக்கப்பட்டது. அதேசமயம், தலிபான்கள் வீடு வீடாகச் சென்று இளம்பெண்களையும், சிறுமிகளையும் தூக்கிவந்து வலுக்கட்டாயமாகத் திருமணமும் செய்துகொண்டார்கள்.

‘அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கிவிட்டோம்’ எனக் கூறிய தலிபான்கள், நீதிபதிகள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், அரசு ஊழியர்கள் என உயர் பொறுப்பில் இருக்கக்கூடிய பெண்கள்மீது குறிவைத்துத் தாக்குதல் நடத்தினர். சிலர், கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்லூரிகளின் வகுப்பறைகளில் திரைச்சீலைகள் போடப்பட்டு இரு பாலரும் பிரித்து வைக்கப்பட்டனர்.

மிக முக்கியமாக, தலிபான்களின் இடைக்கால ஆட்சி அமைந்தபோது, அமைச்சரவையில் பெண்களுக்கென எந்த இடமும் கொடுக்கப்படவில்லை. பெண்கள் விவகாரத் துறை அமைச்சகமும் கலைக்கப்பட்டது. தலிபான்களின் இத்தகைய செயல்பாடுகளை எதிர்த்து, ‘பெண்களுக்கும் சம உரிமை வேண்டும்’ எனக் கோரி ஆப்கான் பெண்கள் போராட்டத்தில் இறங்கினர்.

அமைதி வழியில் போராடிய பெண்களை சவுக்கால் அடித்தும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் அவர்களின் போராட்டத்தை தாலிபன்கள் ஒடுக்கினர். இந்த நிலையில், தற்போது பெண்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு வருவதற்கும், பணியிடங்களுக்குச் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது’ என்பதான அதிர்ச்சியூட்டும் செய்திகளே ஆப்கனிலிருந்து தொடர்ந்து வெளிவருகின்றன.

**கடுமையான சட்டங்கள் கொடூர தண்டனைகள்...**

தலிபான்கள் தீவிரமான ஷரியத் சட்டங்களை அமுல்படுத்தினர். இசை நிகழ்ச்சிகள், கேளிக்கைகளைத் தடைசெய்தார்கள். பொதுவெளியில் பாடல் கேட்டவர்கள் சுடப்பட்டனர். நாட்டுப்புறப் பாடகர் ஃபவாத் அந்தராபியைக் கொடூரமாகக் கொலைசெய்தனர். திருமணவிழாவில் இசை நிகழ்ச்சி நடத்திய 13 பேர், தாலிபன்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகினர். தலிபான்களின் ஆட்சியில் எல்லாத் துறைகளிலும் கடுமையான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

தற்போதும்கூட, எட்டு புதிய கட்டுப்பாடுகளை தலிபான்கள் கொண்டுவந்திருக்கின்றனர். அதாவது, ‘பெண்கள் நடிப்பில் வெளிவரும் தொலைக்காட்சித் தொடர்களை ஒளிபரப்பக் கூடாது, பெண் நிருபர்கள், பத்திரிகையாளர்கள் ஊடகங்களில் பேசும்போது கட்டாயம் தலை, முகத்தை மறைத்து ‘ஹிஜாப்’ அணிந்திருக்க வேண்டும். வெளிநாட்டு கலாசாரத்தைப் போற்றும் படங்கள், ஷரியத் கொள்கைக்கு எதிரான படங்களுக்கு முற்றிலுமாகத் தடைவிதிக்கப்படுகிறது’ என்று அதில் கூறப்பட்டிருக்கிறது.

**தொடர் குண்டுவெடிப்புகள்!**

தலிபான்கள் ஆட்சியில் தீவிரவாதத் தாக்குதல்களும் கடுமையாக அதிகரித்திருக்கின்றன. கடந்த ஒக்ரோபர் மாதத் தொடக்கத்தில், ஷியா பிரிவினர் வழிபடும் மசூதி ஒன்றில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் 50 பேர் பலியானார்கள். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தார்கள். இந்தச் சம்பவம் நடந்த சில நாள்களில், காபூல் விமான நிலையம், பேரோன் ஹோட்டல், குண்டூஸ் பகுதி என மேலும் பல்வேறு இடங்களில் தொடர்ச்சியான குண்டுவெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

அந்த ஒரு மாதத்தில் மட்டும் 90இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தார்கள். இது போன்ற தாக்குதல்களை தாலிபன்களுக்கு எதிரான ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் தொடர்ந்து நடத்திவருகின்றனர். அதேபோல் இந்த நவம்பர் மாதமும், தலைநகர் காபூலிலுள்ள சர்தார் முகமது தாவுத்கான் இராணுவ மருத்துவமனை அருகே நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்பில், 19 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

**பாதாளத்தில் பொருளாதாரம் பட்டினியில் பொதுமக்கள்...**

ஆப்கனில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், அந்த நாட்டுக்கு வழங்கப்பட்டுவந்த சர்வதேச நிதி உதவிகள் நிறுத்தப்பட்டன. வெளிநாட்டு முதலீடுகள், வர்த்தக உறவுகள், போக்குவரத்து என அனைத்து நடவடிக்கைகளும் துண்டிக்கப்பட்டன. தலிபான்களும், ஆப்கானியர்கள் அனைவரும் ‘ஆப்கானி’ நாணயத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று கூறி வெளிநாட்டு நாணயங்களுக்குத் தடைவிதித்தனர். அரசு கஜானா காலியானதால், அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதும் அரசுத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதும் நிறுத்தப்பட்டன. ஆப்கான் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குச் சென்றது.

மேலும், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், உணவுத் தட்டுப்பாடு, பசி, பஞ்சம், வேலைவாய்ப்பின்மை ஆகியவை பன்மடங்கு அதிகரித்தன. ‘ஆப்கானிஸ்தானில் வாழக்கூடிய 95 சதவிகித மக்களுக்குப் போதுமான உணவு இல்லை. சுமார் 2.3 கோடி ஆப்கான் மக்கள் பட்டினியில் சிக்கித் தவிக்கிறார்கள்’ என்று சமீபத்தில் வெளியாகியிருக்கும் ஐ. நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**சாவின் விளிம்பில் குழந்தைகள்**

ஆப்கனில் குழந்தைகளின் நிலை மிகக்கடுமையாக மோசமடைந்திருக்கிறது. யுனிசெவ் (UNICEF) அறிக்கையில், 50 லட்சம் ஆப்கன் குழந் தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் சாவின் விளிம்பில் இருப்பதாகவும் அதிர்ச்சித் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உணவுக்காக, உடைமைகளையும் பெற்ற குழந்தைகளையும் விற்கும் கொடூர நிலைமைக்கு ஆப்கன் மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

தலிபான்களின் ஆட்சியால், உலக அரங்கில் கைவிடப்பட்ட தேசமாக ஆப்கானிஸ்தான் உருமாறியிருக்கிறது. மனிதநேய அடிப்படையில் ஐ.நாவும், உலகச் சுகாதார அமைப்பும் சில உதவிகளைச் செய்துவரு கின்றன. ஆனால், அவை போதுமானதாக இல்லை. இந்த நிலை நீடித்தால், வரும் பனிக்காலத்துக்குள் லட்சக் கணக்கான ஆப்கன் மக்களும் குழந்தைகளும் பட்டினியால் உயிரிழக்கக்கூடும் எனக் கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இத்தனை இடர்பாடுகளுக்கு மத்தியிலும், தலிபான்களின் கடுமையான சட்டங்களும் கட்டுப்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட் டும் மக்கள்மீது திணிக்கப்பட் டும் வருகின்றன. ஆட்சியைக் கையில் வைத்திருப்பவர்கள் மோசமானவர்களாக இருக்கலாம். அதற்காக அங்கு வாழும் அப்பாவி மக்களுக்குச் சென்று சேரவேண்டிய உதவிகளை உலக நாடுகள் நிறுத்தக் கூடாது. ஆப்கன் மக்களுக்கு உடனடியாகச் சர்வதேச நாடுகளின் உதவிகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பதே உலகம் முழுவதுமுள்ள மக்களின் அவசரக் கோரிக்கையாக இருக்கிறது! ■

- விகடன்



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

1) **பின்வரும் பந்தியை வாசித்து 01 தொடக்கம் 06 வரையான வினாக்களிற்கு விடை எழுதுக.**

கடம் கர்நாடக இசையுடன் தொடர்புடைய தாள வாத்தியக் கருவிகளில் ஒன்றாகும். அது மிக எளிமையான ஓர் இசைக்கருவியாகும். இது ஒரு பெரிய மண்பானையில் தட்டுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் இசைக்கருவியாகும். கட இசைக்கலைஞர்கள் அமர்ந்த நிலையில் கடத்தின் வாயைத் தன் வயிற்றோடு ஒட்ட வைத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் அடித்து வாசிப்பர்.

1) 'சிறிய' என்ற சொல்லின் எதிர்ச்சொல் யாது?

..............................................................

2) மிக எளிமையான இசைக்கருவி எது?

..............................................................

3) பந்தியிலுள்ள சினைப்பெயர் ஒன்றினை எழுதுக?

..............................................................

4) 'கருவியில்' என்பதன் பன்மை வடிவம் யாது?

..............................................................

5) உயர்திணை எதிர்கால வினைச் சொல்லை எழுதுக?

..............................................................

6) 'சத்தம்' என்ற சொல்லின் ஒத்த சொல் யாது?

..............................................................

2) **பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

1) தாலாட்டுப்பாடல்கள் இனிமையானது. ( )
2) எனது வீட்டில் அழகான மரங்கள் உள்ளது. ( )
3) அகரன் தமிழும் கணிதமும் படித்தான். ( )

3) **பின்வரும் மரபுத் தொடர்களுக்கான கருத்தை எழுதுக.**

1) நட்டாற்றில் விடுதல் ..........................................................................

2) ஆறப்போடுதல் ..........................................................................

4) **பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்து எழுதுக.**

1) உயர்வு - ................................ 2) அருமை - ................................

5) **வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) வீதியில் சென்ற அனைவரும் குடைபிடித்துச் .......................... (சென்றனர், சென்றான்).
2) சேவல்களும் காகங்களும் கதிரவனை....................... (வரவேற்கிறது, வரவேற்கின்றன).
3) ஓர் அடர்ந்த காட்டில் ............................................ ஆந்தை (ஒரு, ஓர்) இருந்தது.

06) **பின்வரும் பழமொழிகளை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1) பண்டம் / உப்பில்லாப் / குப்பையிலே

..........................................................................................

2) கைப்பழக்கம் / செந்தமிழும் / நாப்பழக்கம் / சித்திரமும்

..........................................................................................

07) **மிகச்சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) வர்ணனை / வர்னனை 2) மகிழ்சி / மகிழ்ச்சி

08) **பின்வரும் தொடர்மொழிக்கான ஒரு மொழியை எழுதுக.**

1) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் - ................................
2) தெருக்கள் கூடுமிடம் - ................................

09) **பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

**(பந்துகள், பிள்ளைகள், அலுமாரி)**

1) உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் - ................................
2) அஃறிணை ஒருமைப் படர்க்கைப் பெயர்ச்சொல் - ................................

10) **பின்வரும் சொற்களில் எதிர்ப்பாற் சொற்சோடி அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) உத்தமன், உத்தமி, தமையன், மகள், மகன்
2) மேலோன், நல்லவன், நல்லவள், பாட்டன், பாட்டி

11) **பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

1)  .......................

2)  ...........................

12) **பின்வரும் சொற்களுக்கான சிங்கள கருத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

1) அம்மாமார் - ........................ 2) வெள்ளை நிறம் -..........................

13) **பின்வரும் ஆங்கில வாக்கியங்களைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

1) He …………….. in the canteen ( is, are)
2) It has two ………… (eye, eyes)

14) **பின்வரும் வாக்கியங்களுக்கான தமிழ்க் கருத்தை எழுதுக.**

1) தெ பொன்ன - ...............................................................
2) ஒயாட்ட மொனவத ஒன? - ...............................................................

# தேவை ஏற்பட்டால் நாடு முடக்கப்படும்!

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அறிவிப்பு



கொழும்பு, நவ. 29

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் தேவை ஏற்பட்டால் நாடு முடக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

“கொரோனாத் தொற்று உறுதியாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தால் நாட்டை முடக்க நேரிடலாம்.

எனினும், தற்போதைக்கு அவ்வாறான ஒரு தேவை ஏற்படவில்லை.

கொரோனாப் பரவுகை நிலைமை மோசமடையாதிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

நாட்டில் கொரோனா மரணங்களில் தளம்பல் நிலை காணப்படுகின்றது.

அண்மைய நாட்களாக இந்த மரணங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகி வருகின்றது.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஒமைக்ரோன் திரிபால் இலங்கைக்கு எவ்வாறான தாக்கம் ஏற்படும் என்பது குறித்து எதிர்வுகூறல்களை தற்போதைக்கு வெளியிட முடியாது.

தென்னாபிரிக்காவுடன் நேரடியான விமானப் போக்குவரத்துச் சேவை கிடையாது” - என்றார். (இ)

# மாவீரர் நாளில் படைகள் அராஜகம்: சஜித் அணியினர் கடும் கண்டனம்!

## இது காட்டாட்சிக்கு எடுத்துக்காட்டு எனவும் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

**மாவீரர் நாளான நேற்றுமுன்தினம் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட அராஜகங்களைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாகக் கண்டித்துள்ளது.**

“இது ஜனநாயக நாடு எனில் போரில் இறந்தவர்களை அமைதியான முறையில் நினைவேந்த அவர்களின் உறவுகளுக்கு உரித்துண்டு. அதை ஆயுதமுனையில் அடக்க முயல்வது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்துகொண்ட விதம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



“வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதேவேளை, சிலர் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு. இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

“நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் நேற்றுமுன்தினம் அரச படைகள் நடந்துகொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது. போரில் இறந்தவர்களை அமைதியாக நினைவேந்த பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில் அதையும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்துகொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாட்டில் இன ரீதியில் - மத ரீதியில் - மொழி ரீதியில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களை உள ரீதியில் மேலும் காயப்படுத்தக் கூடாது” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார். (இ)



### அணைக்கட்டில் விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 29

அணைக்கட்டில் விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை, ஹிங்குருக்கொட பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

மாடுகளை அழைத்துக் கொண்டு அகேரிஸ் அமுன பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் காலை சென்றுள்ள அவர், மாலை ஆகியும் வீடு திரும்பியிருக்கவில்லை.

இந்நிலையில், உறவினர்கள் அவரைத் தேடிச் சென்ற போதே அவர் அணைக்கட்டில் விழுந்து உயிரிழந்தமை தெரிய வந்துள்ளது.

ஹிங்குரக்தமன பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



### 'ஒரே நாடு – ஒரே சட்டம்' பற்றி கருணாகரன் – செந்தில் பேச்சு

கொழும்பு, நவ. 29

“ஒரே நாடு - ஒரே சட்டம்“ தொடர்பான ஜனாதிபதி செயலணிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தமிழ் உறுப்பினரான கருணாகரனுக்கும், இ.தொ.காவின் உப தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமானுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஒரே நாடு - ஒரே சட்டத்தின் ஊடாக சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு முன்னுரிமையளிப்பது குறித்து இதன்போது இருவரும் கலந்துரையாடினர். (இ)

# வடக்கு மாகாண செயலருக்கும் ஆளுநருக்கும் தமிழ் தெரியாது

## பாராளுமன்றில் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

கொழும்பு, நவ. 29

வடக்கு மாகாண செயலருக்கு ஆங்கிலமும் தமிழும் தெரியாது; வடக்கு ஆளுநருக்குத் தமிழ் தெரியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சி.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு மற்றும் 3 இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த சிறிதரன் எம். பி. மேலும் கூறுகையில்,

“யாழ்ப்பாணம் மாவட்டத்திலே இருக்கின்ற குறிப்பாக வடக்கையும், கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள பனை அபிவிருத்தி சபை என்பது இப்போது கொழும்பை நோக்கித் தள்ளப்படுகின்றது. அதனுடைய தலைவராக தற்போது முதன்முதலாக ஒரு சிங்கள மொழி பேசுபவர் நியமிக்கப்பட்டுள்ளார். நான் அவர் மீது குற்றம் சொல்லவில்லை. ஆனால், பனை அபிவிருத்தி சபை தமிழர்களின் பாரம்பரிய தொழிலை அடிப்படையாகக் கொண்டது. எனவே, தயவு செய்து அதனைத் தமிழர்களிடம் விடுங்கள். ஒரு கித்துள் திணைக்களத்துக்கோ அல்லது தென்னை அபிவிருத்தி திணைக்களத்துக்கோ தமிழ்த் தலைவரை நியமியுங்கள் என்று நான் கேட்கவில்லை.

பனை அபிவிருத்தி சபை கம்பணக்காளர், உத்தியோகஸ்தர்களில் கூட அதிகளவான சிங்களவர்கள் இணைக்கப்படுகின்றனர். பனை அபிவிருத்தி சபையை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகினறன. அது வடக்கு, கிழக்குக்கு உரியது. அதில் உள்ள தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களில் நிறைய மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்று அறிகின்றோம். பல பேரின் மாற்றங்களில் தமிழர் நீக்கப்பட்டு சிங்களவர் நியமிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக வடக்கு மாகாண செயலருக்கு ஆங்கிலமும் தமிழும் தெரியாத ஒரு சிங்கள மொழி பேசுபவர். நாங்கள் மொழி ரீதியாக அவருடன் பேச முடியாது. வடக்கு மாகாண ஆளுநரால் கூட தமிழ் பேச முடியாமல் உள்ளது. அவ்வாறான நிலைமைக்குள்தான் நாம் தொடர்ந்தும் தள்ளப்படுகின்றோம்.

ஒரு கல்வி அமைச்சை எடுத்தீர்களேயானால் அங்குள்ள மேலதிக செயலாளர்களில் ஒருவர் கூட தமிழர் இல்லை. பல அரச திணைக்களங்களில் இதே நிலைதான். தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பதற்கு கூட ஆட்கள் இல்லை. இன விகிதாசாரம் கூட பேணப்படாது நிலைமை மோசமாக இருக்கின்றது. தயவு செய்து இந்த விடயத்தில் அதிக கரிசனை செலுத்துங்கள்” - என்றார். (இ)

# ஐரோப்பாவிலும் ஒமைக்ரோன் பிரிட்டனில் புதிய கட்டுப்பாடு



லண்டன், நவ. 29

பிரிட்டன், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகியவை சனிக்கிழமையன்று கொரோனாவின் புதிய திரிபான ஒமைக்ரோன் தொற்றை கண்டறிந்தன.

இதைத் தொடர்ந்து பிரிட்டனின் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளார்.

இதேநேரத்தில் தென்னாபிரிக்காவில் இருந்து பயணம் செய்வதற்கு அதிகமான நாடுகள் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன. அனைத்து வெளிநாட்டினரும் நாட்டிற்குள் நுழைவதைத் தடைசெய்வதாகவும், மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த தொலைபேசி கண்காணிப்பு தொழில்நுட்பத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது.

பிரிட்டனுக்கு வரும் மக்களுக்கான கடுமையான சோதனை விதிகளை உள்ளடக்கிய நடவடிக்கைகளை பிரதமர் பொறிஸ் ஜோன்சன் வகுத்துள்ளார். இங்கிலாந்திற்குள் நுழையும் எவரும் அவர்கள் வருகைக்குப் பிறகு இரண்டாவது நாளின் முடிவில் பி. சி. ஆர். பரிசோதனையை எடுக்க வேண்டும் மற்றும் எதிர்மறையான முடிவு வரும் வரை சுயமாக தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயம். அத்துடன், சுகாதார விதிகளை இறுக்கமாக பின்பற்றுவதும் அவசியம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# பகுதியளவு முடக்கத்துக்கு தயாராகின்றது நெதர்லாந்து

ஆம்ஸ்ரடாம், நவ. 29

கோவிட் -19 தொற்றாளர்களின் உச்சப் பாதிப்பு மற்றும் ஒமைக்ரோன் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமைக்கு மத்தியில் பகுதியளவு பூட்டுதலை நடைமுறைப்படுத்தியது நெதர்லாந்து.

நேற்று ஆரம்பமான இந்தப் பூட்டுதல் நடவடிக்கைகளால் அடுத்த மூன்று வாரங்களுக்கு உணவகம், அருந்தகம், அருங்காட்சியகங்கள், திரையரங்குகள், கலாசார அரங்குகள் என்பன மாலை 5 மணியுடன் மூடப்படுதல் வேண்டும்.

நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து விடாமல் பாதுகாப்பதே இந்த நடவடிக்கையின் முக்கியத்துவம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதனிடையே அந்த நாட்டில், புதிய திரிபான ஒமிக்ரோன் தொற்றாளர்கள் 61 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)




## புதிய திரிபின் பெயர் 'ஒமைக்ரோன்' வைரஸ்!

ஜெனிவா, நவ. 29

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதியவகை பி.1.1.529 கொரோனா வைரஸின் புதிய திரிபுக்கு உலக சுகதார ஸ்தாபனம் 'ஒமைக்ரோன்' என்று பெயரிட்டுள்ளது. இந்த புகிய வகை வைரஸ் கவலைக்குரியது என்றும் அது தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவில்தான் முதல்முறையாக இந்த 'ஒமைக்ரோன்' திரிபு கடந்த புதன்கிழமை கண்டறியப்பட்டது. இதன்பின் ஹொங்கொங், பொட்ஸ்வானா, இஸ்ரேல் நாடுகளிலும் இந்த வகை வைரஸ் கண்டறியப்பட்டது.

இதுவரை கண்டறியப்பட்ட வைரஸ்களில் மிகவும் வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இந்த வைரஸ் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

புதிய திரிபு கண்டறியப்பட்டமையை தொடர்ந்து உலக நாடுகள் பலவும் தெற்கு ஆபிரிக்க நாடுகள்மீது பயணத் தடை விதித்துள்ளன. அத்துடன், தங்கள் நாடுகளில் புதிய கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன. (ஐ)

# புதிய திரிபுக்கு பெயர் மாற்றம் சீனா மீதான பயமே காரணம்?

## சுகாதார ஸ்தாபனத்துக்கு உலக நாடுகள் கண்டனம்

வாஷிங்டன், நவ. 29

சீனாமீதான அச்சத்தால் கொரோனா வைரஸின் புதிய திரிபின் பெயரை உலக சுகாதார அமைப்பு மாற்றியுள்ளது என்று உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. 2019ஆம் ஆண்டு இறுதியில் சீனாவில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தது. உலகம் முழுவதும் பரவி மரபணு மாற்றத்தால் கொரோனா வைரஸின் புதிய திரிபுகள் உலகம் முழுவதும் பரவுகின்றன.

புதிய திரிபுகளை இலகுபடுத்துவதற்காக கிரேக்க எண்களின் பெயர்களை புதிய திரிபுகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் சூட்டுகிறது. இதன்படி அல்பா, பீற்றா, காமா, டெல்டா என்ற எண்களின் பெயர்கள் சூடப்பட்டன.

அண்மையில் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட திரிபுக்கு ஒமைக்ரோன் எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆனால், கிரேக்க எண்வரிசைப்படி 13ஆவது இலக்கத்தைக் குறிக்கும் நியூ (Nu) என்றே பெயரிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நியூ என்றால் புதிய வைரஸ் என்று அர்த்தப்படும். இதனால், அந்தப் பெயர் தவிர்க்கப்பட்டது. நியூவுக்கு அடுத்து 14ஆவது எண்ணான ஜிசாய் (Xi) என்றே பெயரிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதை உலக சுகாதார ஸ்தாபனம் தவிர்த்து விட்டது.

சீன தலைவர் ஜி ஜின்பிங் (Xi jinping) பெயருடன் ஒத்துப் போவதால் அதைத் தவிர்த்து 15ஆவது எண்ணின் பெயரை சூடியுள்ளது. இந்த முடிவுக்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அமெரிக்க எம். பியான டெட் குரூஸ், "சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அஞ்சுகிறது. இந்த அமைப்பை எவ்வாறு எவ்வாறு நம்ப முடியும். அது,மீண்டும் உண்மைகளை மூடி மறைக்கக்கூடும்" என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# பேரழிவை ஏற்படுத்தாது

லண்டன், நவ. 29

ஒமைக்ரோன் திரிபு உலகை அச்சுறுத்துகின்றபோதும், அது பேரழிவை ஏற்பாடுத்தாது என்று இங்கிலாந்து விஞ்ஞானி பேராசிரியர் கலம் செம்பிள் தெரிவித்துள்ளார்.

"இது பேரழிவை ஏற்படுத்தாது. எனது சகாக்கள் இந்த வைரஸ் பயங்க ரமானது என கூறியுள்ளனர். ஆனால், அவர்கள் நிலைமையை மிகைப்படுத்தியுள்ளனர் என்றே நான் கருதுகிறேன்" என குறிப்பிட்டார். "தடுப்பூசியால் கிடைக்கிற நோய் எதிர்ப்புசக்தி, இன்னும் கடுமையான நோயில் இருந்தும் மக்களை பாதுகாக்கும். ", என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)




# ஒமைக்ரோனை தடுக்க 100 நாட்களில் தடுப்பூசி!

## பைசர் நிறுவனம் உறுதி

நியூயோர்க், நவ. 29

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய வகை ஒமைக்ரோன் வைரஸுக்கு (பி.1.1.529) எதிராக எங்கள் தடுப்பூசி செயல்படுமா என்பதை உறுதி செய்ய இயலாது என்று பைசர் மற்றும் பயோஎன்ரெக் மருந்து நிறுவனங்கள் கைவிரித்துள்ளன.

ஆனால், ஒமைக்ரோன் வைரஸுக்கு எதிராக அடுத்த 100 நாட்களில் வீரியம் மிகுந்த தடுப்பூசியை தயாரிக்க முடியும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவில்தான் முதல்முறையாக இந்த ஒமைக்ரோன் வகை வைரஸ் கடந்த புதன்கிழமை உலக சுகாதார ஸ்தாபனத்தால் கண்டறியப்பட்டது. அதன்பின் ஹொங்கொங், பொட்ஸ்வானா, இஸ்ரேல் நாடுகளிலும் இந்த வகை வைரஸ் கண்டறியப்பட்டது.

இதுவரை கண்டறியப்பட்ட வைரஸ்களில் மிகவும் வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இந்த வைரஸ் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். முதன் முதலில் இந்த வைரஸ் தென்னாபிரிக்காவில் கடந்த வாரம் கண்டறியப்பட்டது.

இந்நிலையில் முன்னணி தடுப்பூசி நிறுவனங்களான பைசர் - பயோஎன்டெக் நிறுவனங்கள் வீரியம் மிகுந்த ஒமைக்ரோன் திரிபுக்கு எதிராக தங்களின் தடுப்பூசி சிறப்பாகச் செயல்படுமா என உறுதியாகத் தெரியாது எனக் கூறின. அத்துடன், 100 நாட்களில் புதிய தடுப்பூசியை தயாரிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# சட்டவிரோத தங்க வேட்டைக்காக அமேசனில் 300 படகுகள் திரண்டன

பிரேசிலியா, நவ. 29

சட்டவிரோதமாக செயல்படும் தங்கச் சுரங்கங்களுக்கு சொந்தமான நூற்றுக்கணக்கான அகழ்வு படகுகள் அமேசனின் மதேரா நதியில் தங்க வேட்டைக்காக குவிந்துள்ளன.

பிரேசிலின் அமேசன் காடுகளில் தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன என்று வெளியான செய்தியைத் தொடர்ந்து தங்க வேட்டைக்காக பலர் முயன்றுள்ளனர். கிளாஸ்கோ பருவநிலை மாற்ற மாநாட்டில் அமேசன் மழைக் காடுகளைப் பாதுகாக்க உறுதியளித்த நிலையில், நூற்றுக்கணக்கான படகுகள் தங்கத்துக்காக அமேசன் நதிகளில் குவிந்துள்ளன.

இந்தப் படகுகள் தங்கத்துக்காக ஆற்றுப்படுகைகளைச் சுரண்டி வெற்றிடமாக்கி வருகின்றன என்று கூறப்படுகின்றது. 300இற்கும் மேலான படகுகள் இரண்டு வாரங்களாக நதியில் மிதந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிரேசிலின் கிறீன்பீஸ் செயல்பாட்டாளர் டேனிக்லி அகுயர் கூறியுள்ளார். (ஐ)



# மகளிர் உலகக் கிண்ணம் தகுதி இழந்தது இலங்கை!

டுபாய், நவ.29

சிம்பாப்வேயில் நடைபெற்று வந்த மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்று போட்டி கைவிடப்பட்டமையை அடுத்து, நியூசிலாந்தில் 2022 இல் நடைபெறவுள்ள மகளிர் உலகக்கிண்ண 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் தகுதியை இலங்கை இழந்துள்ளது.

சிம்பாப்வேயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான 9 நாடுகளுக்கு இடையிலான மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்று, கோவிட் - 19 தொற்று நோய் காரணமாக பல ஆபிரிக்க நாடுகளிலும் சிம்பாப்வேயில் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் சனிக்கிழமையுடன் போட்டி இரத்து செய்யப்பட்டது.

இதனிடையே, இலங்கை அணியின் உதவியாளர்களில் ஒருவர் கொரோனா தொற்றுக்கான நேர்மறை அறிக்கையைக் கொண்டிருந்ததால் இலங்கைக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான நேற்றுமுன்தினம் நடக்கவிருந்த போட்டி கைவிடப்பட்டது.

நியூசிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு கடைசி 3 தகுதிகாண் அணிகளைத் தீர்மானிக்கும் பொருட்டு 9 நாடுகளுக்கு இடையிலான மகளிர் தகுதிகாண் சுற்று சிம்பாப்வேயில் நடத்தப்பட்டு வந்தது.

இந்தத் தகுதிகாண் சுற்று இடையில் இரத்துச்செய்யப்பட்டதால் அணிகளுக்கான தரவரிசையில் 6, 7, 8 ஆம் இடங்களை வகிக்கும் முறையே பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் ஆகியன அடுத்த வருட மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாட தகுதிபெற்றுள்ளதாக ஐ. சி. சி. அறிவித்தது. இதனால், இலங்கை அணி வாய்ப்பை இழந்தது. (ஐ)



# மகளிர் பிக் பாஷ் லீக்; பெர்த் அணி சம்பியன்!

பெர்த், நவ.29

மகளிர் பிக் பாஷ் லீக் இருபது - 20 தொடரில் பெர்த் ஸ்கார்சர்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவில் பெண்களுக்கான பிக் பாஷ் லீக் இருபது -20 கிரிக்கெட்டின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் பெர்த் நகரில் நடைபெற்றது. இதில் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ், அடிலைட் ஸ்டிரைகர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வென்ற அடிலைட் அணி பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியின் டிவைன் 35 ஓட்டங்களையும், காப் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதையடுத்து, 147 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் அடிலைட் அணி களம் இறங்கியது. அந்த அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி, முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

# ஸ்ரேயாஸ், சகா அபாரம்: நியூசிலாந்துக்கு 284 இலக்கு!

கான்பூர், நவ. 29

நியூசிலாந்து அணி சிறப்பாக பந்து வீசிய போதிலும், ஸ்ரேயாஸ் ஐயர், சஹா ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் ஏழு விக்கெட் இழப்புக்கு இந்தியா 234 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் கான்பூரில் மோதும் முதல் டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று, தனது ஆட்டத்தை தொடங்கிய இந்தியாவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. 22 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, ஜமைசன் வீசிய பந்தில் புஜாரா விக்கெட்டை பறிகொடுத்தார். பின்னர், களமிறங்கிய அணித் தலைவர் ரஹானே தனது சொதப்பல் ஆட்டத்தையே தொடர்ந்தார். அவர் 4 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, சுழல் பந்துவீச்சாளர் அஜஸ் பட்டேல் வீசிய பந்தில்ஆட்டமிழந்தார்.

பின்னர், அகர்வால் 17 ஓட்டங்களுக்கும் ஜடேஜா ஓட்டம் எதுவும் எடுக்காமலும் பெவிலியன் திரும்பினர். உணவு இடைவேளை வரை, இந்தியா 5 விக்கெட் இழப்புக்கு 84 ஓட்டங்களை எடுத்திருந்தது. பின்னர், இணைந்த ஸ்ரேயாஸ் ஐயர், அஸ்வின் சிறப்பாக விளையாடி 50 ஓட்டங்களை சேர்த்தனர்.



இருப்பினும், ஜமைசனின் ஆக்ரோஷமான பந்து வீச்சை தாக்கு பிடிக்க முடியாமல் அஸ்வின் தனது விக்கெட்டை பறிகொடுத்தார். தொடர்ந்து, சிறப்பாக விளையாடிய ஸ்ரேயாஸ் அரைச்சதம் அடித்து, இந்திய அணியை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றினார். சௌதி வீசிய பந்தில், 65 ஓட்டங்களை எடுத்திருந்தபோது அவரும் தனது விக்கெட்டை இழந்தார். தேநீர் இடைவேளை வரை, இந்தியா ஏழு விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களை எடுத்தது.

முக்கியமான கட்டத்தில், அக்ஸருடன் இணைந்த சஹா, பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களை குவித்தார். எதிர் அணியின் பந்து வீச்சாளர்களை நேர்த்தியாக கையாண்டு அரைச்சதம் கடந்தார். இறுதியாக, ஏழு விக்கெட் இழப்புக்கு 234 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, இந்திய அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அப்போது, விரித்திமன் சகா 61 ஓட்டங்களையும், அக்சர் பட்டேல் 28 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நியூசிலாந்து அணி சார்பாக, சௌதி, ஜமைசன் தலா மூன்று விக்கெட்களையும் அஜஸ் படேல் ஒரு விக்கெட்டையும் எடுத்தனர்.

இதனால், நியூசிலாந்து அணிக்கு 284 ஓட்டங்களை இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஆட வந்த நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர் யங், அஸ்வின் வீசிய பந்தில் எல். பி. டபிள்யூ முறையில் வெளியேறினார். நேற்று நான்காம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது, நியூசிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 4 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரொம் லதம் 2 ஓட்டங்களுடனும், வில்லியம் சம்மர்வில் ஓட்டம் எதையும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் ஐந்தாவது மற்றும் இறுதி நாளாகும். (ஐ)

# இலங்கை - மேற்கிந்தியா இரண்டாவது டெஸ்ட் இன்று!

கொழும்பு, நவ. 29

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 187 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த நிலையிலேயே இன்று காலியில் இரண்டாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகின்றது. கடந்த போட்டி போன்றே இந்தப் போட்டியிலும் மைதானம் சுழல் பந்து வீச்சுக்கே சாதகமாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

கடந்த போட்டியில், முதல் இனிங்ஸில் 147 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 83 ஓட்டங்களையும் குவித்து இலங்கையின் வெற்றிக்கு பிரதான பங்கு வகித்தார். இதனால், இந்தப் போட்டியிலும் அவர் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களுக்கு அதிகம் உள்ளது.



காலி மைதானத்தைப் பொருத்தவரை நாணயச் சுழற்சியில் வெற்றி பெறுவது மிக முக்கியமானதாக உள்ளது. ஆட்டம் தொடரும் போது வேகமாகவும் பின்னர் மெதுவாகவும் ஆடுகளம் மாறிவிடும் தன்மை கொண்டது. இதனால், நான்காவதாக துடுப்பெடுத்தாடும் அணியால் அதிக ஓட்டங்களை குவிக்க முடியாது. இதுவரை இரு முறை மட்டுமே மூன்று இலக்க ஓட்டங்களை அணிகள் துரத்தி வெற்றி பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி (உத்தேசம்)- திமுத் கருணாரத்ன (தலைவர்), பதும் நிசங்க, ஒஸத பெர்னாண்டோ, அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, தினேஷ் சந்திமால் (விக்கெட் காப்பாளர்) சரித் அசலங்க, ரமேஷ் மெண்டிஸ, லசித் எம்புல்தெனிய, சுரங்க லக்மால் அல்லது துஷ்மந்த சாமீர, பிரவீன் ஜெயவிக்கிரம.

மேற்கிந்தியா (உத்தேசம்) - கிரெய்க் பிராத்வெய்ற் (தலைவர்), ஜெர்மி சொலோஷனோ அல்லது ஷாய் ஹோப், பொன்னர், றோஸ்ரன் சேஷ், ஜெர்மைன் பிளக்வூட், கைல் மேயர்ஸ், ரகீம் கோன்வோல், ஜசன் ஹோல்டர், ஜோஷ்வா டா சில்வா (விக்கெட் காப்பாளர்), கேர்மர் ரோச், ஜொமெல் வாரிகன் அல்லது ஜெய்டன் சீல்ஸ். (ஐ)

# இந்தியாவிடம் பெருந்தொகை கடனை கோருகிறது இலங்கை

## டிசெம்பர் 10 இற்குப் பஸில் டில்லி விஜயம்

கொழும்பு, நவ.29

**இந்தியாவிடமிருந்து 150 கோடி டொலர்களைக் கடனாகக் கோருவதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது.**

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ டிசெம்பர் 10 ஆம் திகதிக்குப் பின்னர் டில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அந்த நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரை சந்தித்து பஸில் ராஜபக்ஷ பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போதே மேற்படி தொகை நிதி கடனாகக் கோரப்படவுள்ளது.

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற்காகவே கடன் பெறப்படுகின்றது. (இ)



## வானொன்றில் வெடிபொருட்களுடன் பயணித்த ஐவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, நவ. 28

அனுமதிப் பத்திரமின்றி வெடிபொருட்களை வானொன்றில் கொண்டு சென்ற ஐவரைப் பொலிஸார் கைதுசெய்யதுள்ளனர்.

அனுராதபுரம் பதவிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரியதாசகமை, பதவிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெடிபொருட்களுடன் குறித்த வான் சிக்கியுள்ளது.

53 கிலோகிராம் நைத்ரேட், 2 ஆயிரத்து 192 அடி நூல், 178 ஜெலட்னைட் குச்சிகள், 320 டெட்டனேட்டர்கள், 1 கயிறு, 1 இரும்பு மற்றும் இயந்திரம் என்பவற்றுடன் வானில் இருந்த ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மதவாச்சி, கெக்கிராவை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 29 - 46 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

## துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த நபர் மீது மாணவி கடும் தாக்குதல்

கொழும்பு, நவ. 29

வீதியில் நடந்து சென்ற பாடசாலை மாணவி ஒருவரை நபர் ஒருவர் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த சம்பவம் பண்டாரவளை, எல்ல கரந்தகொல்லை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

17 வயதுடைய பாடசாலை மாணவி பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வேளையில் குறித்த சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

கிராமத்துக்குச் செல்லும் கிளை வீதியில், ஸ்கூட்டரில் வந்த ஒருவர், வீதியில் மாணவியை மறித்து, மாணவியைத் தாக்கி, அருகில் உள்ள பாழடைந்த தோட்டத்துக்கு இழுத்துச் சென்றுள்ளார்.

பின்னர், சந்தேகநபர் மாணவியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றபோது, மாணவி சந்தேக நபரின் முகத்தைக் கடித்து, கல்லால் முகத்தில் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் சந்தேகநபரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பிரதேசம் பாழடைந்த பகுதியாகக் காணப்படுவதால் கடந்த காலத்திலும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## மண்மேடு சரிந்து வீட்டில் விழுந்ததில் மனைவி மரணம்; கணவன் படுகாயம்

கண்டி,நவ.29

வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் குடும்பப் பெண்ணொருவர் மரணமடைந்தார்.

பொலனறுவை, அங்கும்புர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரம்புக்வெல பிரசேத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த பெண்ணின் கணவன் மண்ணுக்குள் புதையுண்ட நிலையில் மீட்கப்பட்டு போக்கவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று அங்கும்புர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் பெய்த கடும் மழையையடுத்து வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

அனர்த்தம் இடம்பெறும் போது வீட்டினுள் குறித்த தந்தை, தாய் மற்றும் மகள் ஆகியோர் இருந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மண்ணுள் புதையுண்ட தாயும் தந்தையும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், தாய் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

ரம்புக்வெல பிரதேசத்தை சேர்ந்த 56 வயது பெண்ணே மரணமடைந்தார்.

பிரேத பரிசோதனைக்காக போக்கவல வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (இ)

## விரும்பியவாறு மருந்தை பயன்படுத்த வேண்டாம்!

### சுகாதார மேம்பாட்டு பணியகம் வேண்டுகோள்

வைரஸ் தொற்றால் ஏற்படும் தடிமன் மற்றும் காய்ச்சல் போன்ற நோய்களுக்குக் கூட தாம் விரும்பியவாறு நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்வது உகந்தது அல்ல என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இது ஒரு பயங்கரமான விளைவைத் தரக்கூடியது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள அனைத்து நுண்ணுயிர் எதிர்ப்பு பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்தே அவற்றின் மூலமான பயன் அமையும் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தனது முகப்புத்தகத்தில் ஒரு குறிப்பை வெளியிட்டுள்ளது. (இ)

## மஹாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதிய (திருத்த) சட்டமூலத்துக்கு ஒப்புதல்

கொழும்பு, நவ. 29

1981ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அங்கீகரிக்கப்பட்டது.

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்தத் (திருத்த) சட்டமூலத்தின் மூலம் மூன்று முக்கிய விடயங்கள் திருத்தப்படவுள்ளன. மஹாபொல புலமைப் பரிசில் நிதியத்தின் பெயரை லலித் அத்துலத்முதலி புலமைப்பரிசில் நிதியமாக

மாற்றுவது, மஹாபொல அறக்கட்டளையின் தலைவர் பதவிக்கு ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரை நியமிப்பது மற்றும் பொதுச் சொத்துக்கள் சட்டத்தின்கீழ் இந்த நிறுவனங்களைக் கையாள்வது போன்ற திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, இந்த சட்டமூலம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (இ)

## இந்தியாவுக்கான விமான சேவையை அதிகரிக்க இலங்கை அரசு தீர்மானம்

### ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இந்தியாவுக்கான விமான சேவைகளை அதிகரிக்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று நோய்க்கு முன்னர் இருந்ததைப் போலவே ஸ்ரீலங்கன் விமான சேவையை மீண்டும் நிறுவ உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

அதன்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இந்திய நடவடிக்கைகள் குறித்து சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்த இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க இது ஒரு சிறந்த வாய்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார்.



இலங்கையின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா திகழ்கின்றது எனவும், இந்தியாவுக்கான முழுமையான செயற்பாடுகளை மீள ஸ்தாபிக்க ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது எனவும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் மேலும் கூறினார். (இ)

## அரச கூட்டுக்குள் மோதல் உக்கிரம்

### சு.கவை வெளியேற்ற 'மொட்டு' உறுப்பினர்கள் வியூகம்

கொழும்பு, நவ. 29

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு எமக்குத் தேவையில்லை. ஆட்சியை முன்னெடுப்பதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் அவசியமில்லை.”

- இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சின் கைகளிலுயே தங்கியுள்ளது என அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”இப்படியெல்லாம் பிரச்னை வரும் எனத் தெரிந்துதான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களுக்கு வேட்புமனு வழங்க வேண்டாம் என நான் அன்றே வலியுறுத்தினேன். தற்போது அரசில் இருக்க முடியாவிட்டால் வெளியேறட்டும். அதனால் எமக்குப் பாதிப்பு இல்லை. அரசுக்குள் இருந்துகொண்டு - சிறப்புரிமைகளை அனுபவித்தபடி விமர்சனங்களை முன்வைப்பதைவிடவும், வெளியேறுவதே நல்லது” - என்றார். (இ)

ஈழநாடு
Eelanadu

# செய்தியாளர்மீதான தாக்குதலை கண்டித்து கிழக்கிலும் போராட்டம்

## மட்டக்களப்பு நினைவுத்தூபி அருகே பலர் பங்கேற்பு

**மட்டக்களப்பு, நவ. 29**

**சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து மட்டக்களப்பில் நேற்று கண்டனப் போராட்டம் நடைபெற்றது.**

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு ஊடக அமையம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

'வடக்கு, கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் நீதி கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம்' எனும் தொனிப் பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபி அருகே நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில்



ஊடகவியலாளர்கள், பல்சமய ஒன்றியங்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (இ)

# நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையில் சந்திப்பு

*யாழ்ப்பாணம், நவ. 29*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கின்ற செயற்பாடுகளில் ஒன்றான நாவலர் கலாசார மண்டபத்தைப் புனரமைத்தலும் அங்கு நாவலர் பெருமானின் பணிகளை முன்னெடுத்தலும் என்ற செயற்றிட்டத்துக்கு அமைவாக, நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான சந்திப்பு யாழ். மாநகர சபையில் நேற்று நடைபெற்றது.

இந்து சமய, கலாசார அலுவவல்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் பணிகளை யாழ். மாநகர சபையோடு இணைந்து செயல்படுத்தும் வகையில் சுமுகமான முறையிலே இடம்பெற்ற இந்தச் சந்திப்பு நிகழ்விலே, பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீஇராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா, பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம், யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், யாழ். மாநகர சபை ஆணையாளர்



த.ஜெயசீலன், யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் தயானந்த ராஜா, ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபையின் தலைவர், விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு நிகழ்விலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாம கேஸ்வர னால் நாவ லர் கலாசார மண்டபம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கத்துக்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள், யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனிடம் கையளிக்கப்பட்டது.

நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாகச் சுமுகமான முறையிலே இடம்பெற்ற கலந்துரையாடலில் , இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு சேர்ந்து நாவ லர் கலாசார மண்டபம் தொடர்பான பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக, சபையினரோடு கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபை நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது. (இ - 03)




## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 12 - 1956



உதிர்வு 26 - 12 - 2021

### ரட்ணம் மகேந்திரன் (அம்ரூஸ்)

*(மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)*

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய், சவுதி அரேபியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், சுவிஸ் Baden ஐ தற்போதைய வசிப்பிடமாவும் கொண்ட ரட்ணம் மகேந்திரன் அவர்கள் 26.11.2021 வெள்ளிக் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லையா ரட்ணம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஏரம்பு நாகராஜா- கண்மணிதேவி தம்பதியரின் மூத்த மருமகனும், விஜயகுமாரி அவர்களின் அன்புக் கணவரும், நிரோசன், விதூசன், மதூசன் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், மதுரா அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ரட்ணமலர் அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பூபாலசிங்கம் அவர்களின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிவயோகநாதன் மற்றும் கமலநாதன், கணேசநாதன், சிவசண்முகநாதமுதலி, ஸ்ரீபத்மநாதன், நல்லைநாதன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், வசந்தா, ராஜி, துசி, தேவா, றஞ்சித் ஆகியோரின் அன்பான தந்தை போன்ற அத்தானும், ஸ்ரீ , அன்ரன் றவி ஆகியோரின் சகலனும், ஸ்ரீதேவி அவர்களின் உடன்பிறவாச் சகோதரரும், சகானா, ஷோபிகா ஸ்ரைபான், தாரணி, தீபனா ஆகியோரின் பெரியப்பாவும்,சுமதி, அகிலன், சுதா, ராகவி, அபிஷன், யதுர்சன், ஜோதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**விதூசன் (மகன்):**
+41792620476
**ஸ்ரீ (சகலன்) :**
+41797115400
**தேவா (மைத்துனர்):**
+41794640183

*தகவல்:*
**குடும்பத்தினர்.**







*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மதராச பட்டிணம்,நான் மகான் அல்ல ஆகிய திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-சிறுநீரக வைத்திய நிபுணர் பிரமா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி - அதிகரித்து வரும் விலை அதிகரிப்பால் பாதிக்கப்படுவது மக்களா? வுர்த்தகர்களா?




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு